# பிரளய சகாப்தம்

அறிஞர் மு. கரீம் கனி
எழுதியது.

ஆர். பி. எம். கனி, பி. ஏ., பி. எல்.,
தொகுத்துப் பதிப்பித்தது.

முதல் பதிப்பு: ஏப்ரல் 1953

விலை ஒரு ரூபாய்.

கிடைக்குமிடம்:
யுனிவர்ஸல் பப்ளிஷர்ஸ்,
155/156, அங்கப்ப நாய்க்கன் தெரு,
சென்னை-1.

# பதிப்புரை

**“பிரளய சகாப்தம்”** அறிஞர் மு. கரீம் கனி அவர்களின் மூன்றாவது மார்க்க ஞான நூலாகப் பதிப்பிக்கப்பட்டுள்ளது. “ஜோதி”யும் “சந்நிதான”மும் அன்பர்களின் பேராதரவைப் பெற்றது போல இதுவும் ஆதரவு பெற வேண்டுவது அவசியம். திரு குர்ஆனையும் ஹதீஸையும் அவற்றின் தத்துவார்த்தங்களையும் உணரவும், உணர்ந்து அவற்றின்படி நடக்கவும் ‘பிரளய சகாப்தம்’ தூண்டிவிடக்கூடியது. அறிஞர் கரீம் கனி முஸ்லிம் சமுதாயம் சீர்ப்பட வேண்டும் என்ற ஒரே நோக்குடன், தமது மார்க்க ஞானத்தையும், உலக ஞானத்தையும் அடிப்படையாகக் கொண்டு எழுதிய விஷயங்கள் இந்நூலில் இடம் பெற்றுள்ளன.

இதிலுள்ள விஷயங்கள் மூன்று ஆண்டுகளுக்கு முன்னமேயே எழுதப்பட்டவையாகும். பிரளய சகாப்தம் ஆரம்பிக்கப் போகிறது என்ற எச்சரிக்கை தந்து அன்று எழுதப்பட்ட விஷயங்கள், இன்று, கடந்த மூன்றாண்டையச் சம்பவங்களால்போதிய அளவுக்கு நிரூபணமாகியுள்ளன. எனவே தான் இவற்றைப் பதிப்பித்து வெளியாக்க நான் முன்வந்தேன். எனினும் இன்றைக்குத் தேவையான முறையில் இவற்றில் மாறுதல்களும், சிறு திருத்தங்களும், சுருக்கங்களும், விரிவுகளும் செய்யப்பட்டிருக்கின்றன. ஆனால் அவை அறிஞர் கரீம் கனியின் எந்தக் கருத்தையுமோ, விஷயத்தையுமோ மாற்றும் அளவுக்குச் செய்யப்பட்டில்லை. சிற்சில விஷயங்கள் மட்டும் அவற்றின் முக்கியத்துவம் கருதி மீண்டும் மீண்டும் பிரஸ்தாபிக்கப்பட்டுள்ளன.

தமிழ் நாட்டுக்கு இன்று அறிஞர் கரீம் கனியின் ‘ஜோதி’, ‘சந்நிதானம்’, ‘பிரளய சகாப்தம்’ ஆகிய மூன்றும் மிக மிக அவசியமான நூற்கள் என்பதை உணரும் ஒவ்வொருவரும் இவற்றைப் பரப்பும் பணியில் பங்கு கொள்ள வருமாறு வேண்டுகிறேன். இந்நூற்களை எழுதிய அறிஞருக்காக அன்பர்கள் யாவரும் அல்லாஹ்வின்பால் ‘துஆ’ இறைஞ்சுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**ஆர். பி. எம். கனி,**
**பதிப்பித்தவன்.**

இன்றைய முஸ்லிம் மாணவர்
உலகு படித்துச் சிந்திக்க
இச்சிறு நூல் உதவுமாக.

— **ஆர். பி. எம். கனி.**

# பிரளய சகாப்தம்

காலச் சக்கரம் என்பதுஓர் அதிசயமான பொருள். இருபத்து நான்கு மணி நேரத்தைக் கொண்ட சிறிய சுற்றுதல் உள்ள சக்கரமும் உண்டு. ஏழு நாளைக்கொரு தடவை சுற்றி முடிக்கும் வாரச் சக்கரமும் உண்டு. இருபத்தி ஒன்பதரை நாட்களில் ஒரு சுற்று முடியும் மாதச் சக்கரமும் உண்டு. முன்னூற்று அறுபத்து நான்கு நாட்களில் சுற்றி முடியும் ஆண்டுச் சக்கரமும் உண்டு. இவ்விதமே இதைவிடப் பெரிய சகாப்தச் சக்கரமும் உண்டு.

ஆதி மனிதரான ஹஜ்ரத் ஆதம் (அலை) அவர்கள் காலத்தில் ஒரு நாழிகை, நாள், வாரம், மாதம் யாவும் எப்படி இருந்தனவோ அதே விதம்தான் இன்றும் இருந்து வருகின்றன. ஆனால் அதே நாட்களும், வாரங்களும், மாதங்களும், ஆண்டுகளும், சகாப்தங்களும் அடைந்து வந்திருக்கிற மாறுதல்களோ மகத்தானவை.

அதிலும் குறிப்பாகக் கடந்த மூன்று ஆண்டுகளாக உலகில் ஏற்பட்டுவரும் சம்பவங்கள் யாவரையுமே திகைக்க வைப்பனவாக இருக்கின்றன. உலகம் முழுவதிலுமே கஷ்டங்கள் தினந்தோறும் பெருகி வருகின்றன. குளிர்ந்த யுத்தம் கொடுத்துக் கொண்டிருக்கும் அமெரிக்காவும் ருஷ்யாவும் உண்டாக்கிவரும் அழிவு ஆயுதங்கள் ஒரு பக்கம்; இயற்கையின் கொந்தளிப்பால் மக்கள் துயரப்படுவது மறு பக்கம். கடந்த மூன்று ஆண்டுகளில் மட்டும் எத்தனை உலகச் சங்கடங்கள் நிகழ்ந்துவிட்டன! துருக்கியில் பன்முறை பூமியதிர்ந்து பல்லாயிரவர்

பலியாயினர். ஈரானில் பூமியதிர்ச்சி; அஸ்ஸாமில் இயற்கையின் கொடுமை; ஏராளமானவர் உயிரிழந்தனர். பல ஊர்களே அழிந்துவிட்டன. ஆந்திராவில் வெள்ளப் பெருக்கால் அவதிப்பட்டோர் அனேகர். தஞ்சை-திருச்சி புயலால் தவித்து நிற்பவர்கள் பல்லாயிரவர். மேற்கு ஐரோப்பாவின் பல நாடுகளில் புயலும் வெள்ளமும் பல ஊர்களைப் பலி கொண்டுவிட்டன. இது மட்டுமல்ல; மழை மாமூலாகப் பெய்த ஊர்களிலும் மழையே தலைகாட்டாது தொடர்படியாகப் பஞ்சம் நின்று நிலவி வருகிறது. சாதாரணமாக மழையே பெய்யாத இடங்களில் வெள்ளப் பெருக்கெடுத்தோடுகிறது! அரசியல் வாதிகளின் திட்டங்கள் கூடத் தவிடு பொடியாகின்றன. நம் நாட்டில் 1951-ம் ஆண்டுக்குள் நமக்கு வேண்டிய உணவை நாமே உற்பத்தி செய்து கொள்வது என்று திட்டமிட்டனர். இதுவரை பஞ்சத்தின் பிடிப்பில் அகப்பட்டுத்தான் தேசம் தவிக்கிறது. இது போலவே உலகெங்கணும் எட்டிய யோசனைகளும், கட்டிய திட்டங்களும் சிதறிப்போகின்றன. எதிர்பார்த்தவை நடக்கக் காணோம். நினைத்திராத இடைஞ்சல்கள் தலை தூக்குகின்றன.

இது மட்டுமல்ல; அக்கிரமக்காரர்களும், அநியாயஞ் செய்பவர்களும் இவ்வுலகிலேயே தண்டிக்கப் படுவதை நாம் கண்முன் காணும் நிலைமையும் ஏற்பட்டுள்ளது. இன்று இஸ்லாத்தின் விதிகளென திரு குர்ஆனில் உள்ள அல்லாஹ்வின் உத்தரவுகளிலும், ஹதீஸ் கிரந்தங்களிலுள்ள வியாக்யானங்களிலும் இவற்றுக்கெல்லாம் முன்னறிவிப்புகள் இருப்பதை உணர்ந்து நாம் கண்திறக்க வேண்டிய

காலம் இது. இன்றைய நிகழ்ச்சிகள் கண்டு கவலையுறும் ஒவ்வொரு மானிடனும் இன்று கூர்ந்து நோக்க வேண்டிய விஷயங்கள் திரு குர்ஆனிலும், ஹதீஸ் கிரந்தங்களிலும் நிறைய இருக்கின்றன. ஒரு புதிய சகாப்தம் ஆரம்பித்துவிட்டது என்பதை உணர்ந்து, தனி மனிதர்களும் சமுதாயங்களும் திருந்திக்கொள்ள, திருந்தி நேர் வழியில் நடக்க, இத்தகைய ஆராய்ச்சி இன்று மிக மிக அவசியமானதாக இருக்கிறது.

யூத வேதக் கணக்குப்படியும், கிறிஸ்தவ வேதக் கணக்குப்படியும் கூட ஒரு புதிய சகாப்தம் ஆரம்பிக்கப்பட்டதாகவே நம்பப்படுகிறது. முதல் மனிதராகிய ஹஜ்ரத் ஆதம் (அலை) அவர்கள் தொட்டு இதுவரை ஆறு ஆயிரம் ஆண்டுகள் கழிந்துள்ளன என்றும், ஏழாவது ஆயிரம் ஆரம்பித்துவிட்டதென்றும் இவர்களும் கூறுகின்றனர்.

ஒரு நாள் ஆயிரத்துக்குச் சமம் என்று பைபிளில் சொல்லப்பட்டுள்ளது. வாரத்தில் ஒரு நாள் இருப்பதுபோல், ஒரு சகாப்தத்திலும் ஏழாயிரம் ஆண்டுகள் உண்டு என்று சொல்கிறார்கள். ஆதம் (அலை) அவர்கள் தோன்றி ஆறு பெரும் நாட்கள், அதாவது ஆறாயிரம் ஆண்டுகள் ஆகியுள்ளனவாம்.

ஒரு நாள் ஆயிரம் ஆண்டுகளுக்குச் சமம் என்ற கணக்கு திரு குர்ஆனிலும் புகட்டப்பட்டிருக்கிறது.

**வ-இன்ன - யவ்மன் - இந்தல்லாஹி - க - அல்பி - ஸனத்தின் - மிம்மா - தஉத்தூன்**

இது திரு குர்ஆன் வசனம். அல்லாஹ்வின் சந்நிதானத்தில் ஒரு நாள் (சகாப்தம்) என்பது நீங்கள்

கணக்கிடும் ஆயிரம் ஆண்டுகளைப் போன்றது என்பது இதன் அர்த்தம்.

உலக சரித்திரம் பற்றிய ஹதீஸ்களிலும் இதற்கு ஆதாரமுண்டு.

## அத்துன்யா-ஸப்அ-ஆலாப்-வ-அன-பி-ஆகிரிஹா

'துன்யா ஏழாயிரம்; நான் அதன் இறுதிப் பகுதியில் இருக்கிறேன்' என்ற ஹதீஸ் குறிப்பிடத் தகுந்ததாகும். 'துன்யா' என்றால் இவ்வுலகம் என்பது பொருள். இது 'தன்வு' எனும் அரபி மூலத்திலிருந்து பிறந்தது. இதன் பொருள் 'சமீபத்தில் உள்ளது' என்பது. துன்யா என்பது நமக்குச் சமீபத்தில் உள்ளது; ஆகிரத் என்பது தூரத்தில் உள்ளது. 'அத்துன்யா-ஸப்அ-ஆலாப்' என்ற நபி வாக்கியத்தில் அவர்கள் இருந்த சகாப்தத்தையே குறிப்பிட்டு அது ஏழாயிரம் கொண்டது என்று அருளப்பட்டிருக்கிறது. பைபிள் கணக்குப்படி இப்பொழுதுதான் ஆறாயிரம் முடிந்து ஏழாயிரம் ஆரம்பமாகி இருக்கிறது. ஹதீஸின் கணக்குப்படி, நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அவதாரத்துடன் ஆறாயிரம் முடிந்து ஏழாவது ஆயிரம் ஆரம்பித்து விட்டது. நாம் ஹதீஸின் கணக்கையே ஒப்புக் கொள்கிறோம். ஏனெனில் கீழே விளக்கியுள்ள படியும் கடந்த மூன்று ஆண்டுகளின் நிகழ்ச்சிகளிலிருந்தும் இதுவே சரி என்று ஆகிறதைக் காண்கிறோம்.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அவதார தினத்திலிருந்து கணக்கெடுத்தால் ஹிஜ்ரி 947 வுடன் ஏழாயிரம் ஆகிய சகாப்தம் முடிந்தது; ஹிஜ்ரத் தினத்திலிருந்து கணக்கெடுத்தால் ஹிஜ்ரி 1000-ல் முடிந்தது; நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள்

சமாதி பெற்ற தினத்திலிருந்து கணக்கெடுத்தால் ஹிஜ்ரி 1010 வுடன் ஏழாவது ஆயிரம் முடிந்தது. ஹிஜ்ரி 1000-க்கு முந்திய பல இஸ்லாமிய அறிஞர் கள் எழுதிய நூற்களில் ஹிஜ்ரி 1000 சுமாருக்கு ஒரு காலச் சக்கரம் - சகாப்தம் - முடிந்துவிடுமென எழு தியதுண்டு. 'துன்யா' என்ற பிரஸ்தாப ஹதீஸில் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வர்ணித்த ஏழாயி ரம் ஆண்டு சகாப்தம் முடிந்தபின், முன்னூற்றி ஐம் பத்து நான்கு ஆண்டுகளைக்கொண்ட ஒரு காலச் சக்கரம் நடந்து முடியு மென்றும், அது ஓர் இடை காலமாகவும், மாறுதலுடைய காலமாகவும் இருக்கு மென்றும் சொல்லப்பட்டிருந்தது. ஏழாவது ஆயிரம், நபி அவதார தினத்திலிருந்து என்று வைத் துப் பார்த்தால் ஹிஜ்ரி 947-வுடன் அந்த ஆயிரம் முடிகிறது. ஏனெனில் அவதார தினத்துக்கு 53 ஆண்டுகளுக்குப் பின்தான் ஹிஜ்ரி சகாப்தக் கணக்கு ஆரம்பிக்கப்பட்டது. ஹிஜ்ரி 947 வுடன் 354-ஐச் சேர்த்தால் 1301 வருகிறதல்லவா! இந்தக் கணிதத்தைக் கொண்டுதான் தென்னிந்தியாவில் தோன்றிய அறிஞர் திலகம் ஸய்யிதுனா ஸதகத் துல்லா அப்பா அவர்கள், ஹிஜ்ரி 1300-க்கு மேல் அல்லாஹு அஃலம் (அல்லாஹ்தான் நன்கு அறி வான்) என்று கூறினார்கள்.

ஒரு சகாப்தம் 354 ஆண்டுகளில் முடிவ தென்றால் காலச் சக்கரத்தின் சுழற்சியும் வேகமான தாகத்தானே இருக்கவேண்டும்! அந்த 354 ஆண்டு கள் முடிந்த பின் இருபத்தி ஒன்பதரை ஆண்டு களில் ஒரு காலச் சக்கரம் சுழன்று முடியுமென்ற பேச்சும் இருக்கிறது. நமது ஆராய்ச்சியில் ஏழா வது ஆயிரம் ஆண்டு ஆரம்பித்தது பைத்துல் முகத் தஸ் நகரை நபியின் பிரதிநிதியாக ஹஜ்ரத் உமர்

பாரூக் (றலி) ஜெயித்த தினம் ஆகும். ஹஜ்ரத் தானியால் (அலை) அவர்களின் தீர்க்கதரிசனம், சகாப்த மாறுதல் அடையாள தினம் பைத்துல் முகத்தஸில் ஏற்படும் என்றே பைபிளிலும் காணப்படுகிறது. அந்தக் கொடியேற்று தினத்தன்று ஏழாம் ஆயிரம் ஆரம்பித்து விட்டது என்று கொள்ள இடமுண்டு. இந்த ஆயிரம் ஆண்டுகளும் முடிவுற்று, அதன்பின் தொடங்கிய முன்னூற்று ஐம்பத்து நான்கு ஆண்டுகளுடைய சக்கரம் 1369-ல் (மூன்றாண்டுகளுக்கு முன்பு) முடிவு பெற்றது. அடுத்து நடந்து வரும் இருபத்து ஒன்பதரை ஆண்டுகளில் காலச்சக்கர வேகம் எத்தனை கடுமையானதாக இருக்கும் என்பதைத்தான் கடந்த மூன்று ஆண்டுகளின் நிகழ்ச்சிகள் சுட்டிக் காட்டுகின்றன. இந்தச் சிறிய பிரளய சகாப்தத்தில் ஏற்படப் போகும் ஏனைய சம்பவங்களுக்கு இந்நிகழ்ச்சிகள் முன்னறிவிப்புக்கள்தான். வரவிருக்கும் காலத்தின் ஒரு ஸாம்பிள்-நமூனு-தான் கடந்த மூன்று ஆண்டின் நிகழ்ச்சிகளும் ஆகும்.

## அல்லாஹ்வின் சகாப்தம்

இந்த சகாப்தத்தை 'அல்லாஹ்வின் சகாப்தம்' என்று வர்ணிக்கின் மிகையாகாது.

**லிமனில் - முல்குல் - யவ்ம்.**

"அந்தச் சகாப்தத்தில் ஆட்சி யாருடையதாக இருக்கும்?"

**லில்லாஹில் - வாஹிதில் - கஹ்ஹார்.**

"ஏகன்! அவனை அறிய மறுத்து அவனுக்கு இணைதுணைகளைக் கொள்பவர்களின் விஷயத்தில்

கோபாக்கினியுள்ளவன்! அத்தகைய அல்லாஹ்வின் சகாப்தமாக இருக்கும்.'' விட்டுக் கொடுத்திருந் தான்; கயிறுகளை இறுகப் பிடிக்காது விட்டுக்கொண் டிருந்தான்; ஜின்னுகளுக்கும் மனிதர்களுக்கும் சிறிது சுயராஜ்யம் கொடுத்திருந்தான். அவன் தனது தூதர்களின் மூலம் அனுப்பிய எச்சரிக்கைகள், செய் திகள், சட்ட திட்டங்களை உலகம் அலட்சியம் செய்துகொண்டிருந்தது. மனம்போன போக்கில் நடந்தது. நான் பெரியவன், நீ பெரியவன் என்ற தகராறுகளில் அவன்தான் பெரியவன் (அக்பர்!) என்பதை மறந்தது. அவன் உலகைச் சிருஷ்டித் தது விளையாட்டுக்காகவன்று; ஜின்னுகளும், மனி தர்களும் சேர்ந்து பாழாக்குவதற்காகவன்று; உலகம் ஒரு சுவர்க்கமாகி, உலகில் நீதியும் சத்தியமும் நிறைந்து, சாந்தி மயமான வாழ்வு நடைபெறு வதற்காகச் சிருஷ்டித்தான். (தன்னுடைய தீன் (சட்டப்) படி நடக்கும், தம்மைச் சீர்திருத்திக் கொண்ட (ஸாலிஹான) தனது அடியார்கள் ஸ்வீக ரிப்பதற்காக இவ்வுலகைச் சிருஷ்டித்தான்.

**வ-லகத் - கதப்னா-பிஜ் - ஜபூரி-மின் - ப:தித்-திக்ரி - அன்னல்-அர்ள-யரிதுஹா - இபாதியஸ்-ஸாலிஹூன்.**

"முன்னைய ஏடுகளில் எழுதியுள்ளோம். இந்தக் குர்ஆனின் போதனையுடைய காலத்துக்குப் பின், நிச்சயமாக இந்தப் பூமியை ஸாலிஹான எனது அடியார்களே ஸ்வீகரிப்பார்கள் என்று.''

இது ஸூரா அன்பியாவின் 105-வது ஆயத்து. இது என்ன? வெறும் கூற்று என்று நினைக்கிறீர் கள்? அடுத்த ஆயத்தில்,

**இன்ன - பீ - ஹாதா - ல - பலாகன் - லி - கவ் -மின் ஆபிதீன்.**

இதில் அடியார்களாகிய சமுதாயத்துக்கு சுப சோபனம் இருக்கிறது. அதற்கு அடுத்த ஆயத்துத்தான், நீங்கள் அடிக்கடி செவியுற்றிருக்கக்கூடிய,

**இல்லா - ரஹ்மத்தன் - லில் - ஆலமீன்**

எனும் ஆயத்து. இதற்கு அர்த்தம், "உங்களை உலகத்தவருக்கே ஒரு கருணை வடிவாகவேயன்றி, வெறுமனே அனுப்பவில்லை" என்பதாகும். நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உலகுக்கு வந்தது எதற்கு? ஸூரா அன்பியாவின் 105-வது ஆயத்தில் கூறப்பட்டபடி, உலகத்தையே நல்லடியார்கள் ஸ்வீகரித்து, அக்கினி மயத்திலிருந்து தப்பி உலகம் கருணை மயத்தை அடைவதற்காகவே. உலகமே கருணை மயமான சுவர்க்கமாகி, உலகத்தை அல்லாஹ்வின் அடியார்கள் ஸ்வீகரித்து, உலகில் தீன் ஆட்சி நிலவுவது முதல் இலட்சியம். அதற்குப் பின், உலகம் அழிந்து கியாம நாள் என்ற மறு விஷயமும் உண்டு. உலகில் முதலில் தீனுடைய ஆட்சி ஸ்தாபகம் பெறவேண்டி யிருக்கிறது; அல்லாஹ்வின் சொற்கள் பொய்யாக முடியுமா? உலக முழுவதும் தீன் ஆட்சி ஏற்படாதவரை இவ்வுலகத்தை அல்லாஹ் சிருஷ்டித்த நோக்கம் பூர்த்தியாகாது. ஆகையினால்தான், பெரிய கியாமத்துக்கு முன் சிறிய கியாமமும் உண்டு என்று பெரியார்கள் எழுதிக் காட்டினார்கள். சிறிய கியாமம் நடைபெற வேண்டிய இடம், இப் பூவுலகு. இவ்வுலகில் நீதித் தீர்ப்பு நடைபெறும். அல்லாஹ்வுடைய தீனுடைய சகாப்தத்தை (யவ்முத்தீன்) இந்த உலகமும் கண்டு தீரவேண்டி இருக்கிறது.

இந்தச் சகாப்தம் ஆரம்பித்ததிலிருந்து உலகில் பல மாறுதல்கள் ஏற்பட்டு வருகின்றன. ஏற்படப்

போகும் மாறுதல்கள் உலகைக் கதிகலங்கச் செய்பவைகளாக இருக்கும். இந்தச் சமயத்தில், ஜோதிடங்கள் முதலிய சகல கணிதங்களும் பயனற்றவையாகிவிடும். ஏனெனில், காலச் சக்கரத்தின் வேகத்தை இதற்கு முன் என்றுமில்லாத ஒரு புதிய அளவில் அல்லாஹ் மாற்றி வைத்துவிட்டுள்ளான். அந்த அளவு அவனுக்கு மட்டும் தெரிந்ததாக இருக்கிறது. இச் சமயத்தில் உள்ள நிலைமையைத்தான் பின் வரும் திரு குர்ஆன் ஆயத்து வர்ணிக்கிறது:

**இன்னல்லாஹ இந்தஹு — இல்முஸ்ஸா — அத்தி**

(காலத்தின் ஞானம் அல்லாஹ்வுக்கு மட்டும் தெரிந்ததாக இருக்கும்.)

**வ - யுனஜ்ஜிலுல் - கைத**

(மழை பெய்வதை அதற்கு முன் மனிதர்கள், மாமூல்படியோ, அல்லது அநுபவத்தைக் கொண்டோ, அல்லது கணிதம் கொண்டோ எதிர் பார்த்திருக்கலாம். அந்த மணி அடித்த பின், மாமூல்கள் தலை புரண்டு விடும். பழைய வழக்கப் படி நடக்காது. காற்று புதிய திஞசாக அடிக்கும். வழக்கமாக மழை பொழிந்த சில இடங்களில் மழை காணுது போய்விடும். வானம் பார்த்து நின்ற பூமிகள் சிலவற்றுக்கு லாட்டரிபோல் மழை கொட்டிவிடும்.)

**வ - யஃலமு - மா-பில் - அர்ஹாம்**

(எந்தெந்தக் கருக்களில் என்னென்ன உருக்கள் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன என்பதையும் அவன் அன்றி மற்றெவரும் சரியாக மதிப்பிட முடியாது. இன்ன நிகழ்ச்சிகள் எனும் கருவில் இன்னதுதான் உருவாகுமென்று உலக அரசியல்வாதி

களும், பொருளாதார நிபுணர்களும் கணக்கிடு வார்கள்; உருவாகுவதோ, கிணறு வெட்டப் பூதம் கிளம்பிய கதையாக, வேறு எதுவாகவோ இருக்கும்).

வ-மா-தத்ரீ-நப்ஸுன்-மாதா-தக்ஸிபு-கதன்

(எந்த ஆத்மாவும் நாளை தான் செய்யப் போவது என்ன என்பதை அறிந்துகொள்ள முடியாது. நினையாத மாறுதல்கள், நினையாத நிகழ்ச்சிகள் நடைபெற ஆரம்பிக்கும்).

வ-மா-தத்ரீ-நப்ஸுன்-பி-அய்யி-அர்ளின்-தமூத்

(எந்த ஆத்மாவுக்கும் எந்தப் பூமியில் தனது மரணம் ஏற்படுமென்றும் தெரிந்துகொள்ள முடியாது.)

இது திரு குர்ஆனில் ஸூரா லுக்மானில் உள்ள இறுதி ஆயத்து. இந்தத் திடீர் மாறுதல்களின் காலம் பற்றிய ஹதீஸ்களும் உண்டு. ஒரு ஹதீஸில் "அக் காலத்தில் முஃமினாகச் சிலர் நித்திரைக்குச் செல்வார்கள்; எனினும், காபிர்களாகக் காலையில் எழுவார்கள்" என்ற பயங்கரமான தீர்க்கதரிசனமும் உண்டு. பொழுதடைந்து, மறு பொழுது உதயமாகும் பன்னிரண்டு மணி நேரத்துக்குள், ஈமானைப் பறிகொடுத்துவிடச் செய்யக்கூடிய சோதனைகள் ஏற்படும் என்பது பொருள். எத்தகைய சோதனைகளுக்கெல்லாம் தயாராக இருக்கும்படி நபிகள் நாயகம் (ஸல்) எச்சரித்துள்ளார்கள் என்பதை உணர்ந்து, ஈமானைத் திடப்படுத்திக் கொள்ளுங்கள்,

இக் காலம் பற்றியே ஸூரா ரஹ்மானில் ஆண்டவன் கூறியுள்ள சில சபதங்களும் இருக்கின்றன.

குல்ல - யவ்மின் - ஹுவ-பீ-ஷான் (ஒவ்வொரு நாளும் ஆண்டவனின் தனி உத்தரவுகள் பிறந்து கொண்டிருக்கும்).

யா-மஃஷரல் ஜின்னி-வல் - இன்ஸி - இனிஸ்த்த - தஃத்தும் - அன் - தன்புது - மின் - அக்தாரிஸ் - ஸமாவாத்தி-வல்-அர்ளி-பன்புது-லா - தன்புதூன-இல்லா —பி—ஸுல்த்தான்.

(ஜின்னுகளே, மனுக்களே, வானங்களில், பூமியில் எப்பகுதியிலும் நீங்கள் மனம் போனபடி, நினைத்தபடி, திரிந்துகொள்ள முடியாது; அவனுடைய விசேஷ அதிகாரத்தை (ஸுல்த்தான்) மீறி உங்களால் நகரவும் முடியாது).

## பாதுகாவல் தேடும் மார்க்கம்

நபிகள் நாயகம் (ஸல்) கொடுத்த ஷரீஅத்து, உலகிலேயே கண்ணுக்கு மெய்யான ஸிராத்துல்-முஸ்த்தகீமாக இருப்பதை, இனித்தான் முஸ்லிம்கள் காண முடியும். தினசரி அல்லாஹ்வின் உத்தரவுகள் ஏற்படக் கூடிய சகாப்தத்தில் தினசரி மன்னிப்புக் கோருதலும் தொழுகையும் இல்லாது முடியுமா? அவனன்றி எப்பொருளும் உதவமுடியாத காலத்தில், அவன் முன்னிலையில் தினசரி ஐந்து தடவை ஆஜராவதைவிடக் கார்மான வழி இருக்க முடியுமா? ஜோஸியங்களும் ஹேஷியங்களும் தலைபுரண்டுவிடும் சகாப்தத்தில், இஸ்த்திகாரா தொழுகையின் வரம் எத்தகையதாக இருக்குமென்று சிந்தித்துப் பாருங்கள்!

"ஐந்து நேரத் தொழுகையில்லா விட்டால் என்ன? மஹ்ஷருக்குப் பின்தானே நரகம்! தொழு

கையைப் பேணுவிடில் உலகில் என்ன நஷ்டம் ஏற்படப்போகிறது ?" என்று நினைத்துக்கொண்டு தொழுகை பற்றிய அல்லாஹ்வின் உத்தரவுகளை அலட்சியம் செய்துவருபவர்கள் அநேகர். ஐந்து நேரத் தொழுகையில் பேணுதல் அற்றவன் பெயர் அளவில்-லேபல் அளவில்-முஸ்லிமேயன்றி, உண்மை முஸ்லிமாக ஒருபோதும் இருக்க முடியாது. பிக்ஹு கிதாபுகளில் தொழுகையில்லாதவனைப் பற்றி என்ன பத்வாவை இமாம்கள் எழுதி வைத்திருக்கிறார்களென்று பிக்ஹு நிபுணர்களான ஆலிம்களைக் கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள். எனினும், தொழாதிருந்தவர்களையும், இன்று இல்லாவிடின் நாளை தொழுவார்களென்ற நினைவுடன் முஸ்லிம்களெனப் பாவித்து வரப்பட்டிருக்கிறது. பாவனைகளின் காலம் மலையேறி விட்டது, அரசாங்கத்தின் உத்தரவை மீறுபவன் அரசாங்கப் பிரஜையாக இருக்கமுடியுமா ? திரு குர்ஆனில் ஓர் இடத்தில் அன்று, நூற்றுக்கணக்கான இடங்களில் ஆண்டவன் திரும்பத் திரும்பத் தொழுகையை நிலை நிறுத்துமாறு தனது தனி அருளுக்குப் பாத்திரமான பிரஜைகளாக இருக்கவேண்டிய முஸ்லிம்களுக்கு உத்தரவு கொடுத்திருக்க, அந்த உத்தரவை மீறுபவனை அல்லாஹ் தன் பிரஜை என்றோ, அடிமை என்றோ, தனது தூதரைப் பின்பற்றுபவன் என்றோ கூற முடியுமா ? ஹிஜ்ரி சகாப்தம் பிறந்து 1372 ஆண்டுகளாகியும், இனியும் அல்லாஹ்வின் உத்தரவை மீறிக்கொண்டிருக்கும் முஸ்லிம்கள் இருந்தென்ன, தொலைந்தென்ன ? அல்லாஹ்வின் உத்தரவை மீறுபவர்களுக்குப் பூமி இடம் கொடுக்க மறுக்கும் காலம் பிறந்துகொண்டிருக்கிறது. ஆகையால் முஸ்லிம்களாகிய சகோ

தரர்கள், தொழுகையற்ற முஸ்லிம் முஸ்லிமல்ல என்பதை உணருவார்களாக!

திரு குர்ஆனில் எங்கெங்கு தொழுகை பற்றிய உத்தரவு இருக்கிறதோ அங்கு ஜக்காத் பற்றிய உத்தரவும் இருக்கிறது. இந்த உத்தரவையும் நிறைவேற்றுவதில், பாதுகாப்புப் பெற விரும்பும் முஸ்லிம்கள், இனியும் பாராமுகமாக இருக்கக் கூடாது. நபிகள் நாயகம் (ஸல்) உலகிலிருந்து மறைந்தபின் ஹஜ்ரத் அபூபக்கர் ஸித்தீக் (றலி) என்ன செய்தார்கள்? சில முஸ்லிம்கள் "கலிமா சொல்லுவோம், தொழுவோம், ஜக்காத் மட்டும் கொடுக்கமாட்டோம்" என்று கூறினார்கள். ஜக்காத் கொடுக்காதவன் முஸ்லிமாக இருக்க முடியாதென்று ஹஜ்ரத் அபூபக்கர் ஸித்தீக் (றலி) உத்தரவிட்டார்கள்; அவர்கள் மீது படை எடுத்தார்கள். இது இஸ்லாமியச் சரித்திரம். அப்படி இருக்க ஜக்காத் கொடுக்காமல் இருந்துகொண்டு உங்களை முஸ்லிம்கள் என்று சொல்லிக் கொண்டால், உங்களை நீங்களே ஏமாற்றிக்கொள்ளலாமே தவிர, ஜக்காத்தை உத்தரவிட்ட அல்லாஹ்வின் முன்னும் அவனது ரஸூலின் முன்னும் முஸ்லிம்களாகமாட்டீர்கள். ஆகையால், முஸ்லிம்களுக்கு வாக்களிக்கப்பட்டுள்ள வரங்களையோ அருள்களையோ பாதுகாப்புக்களையோ நீங்கள் எதிர்பார்க்க முடியாது. திரு குர்ஆன் மொழிகளும், ஹதீஸ் வியாக்யானங்களும் வெறும் போதனைகளாக இருந்த சகாப்தம் முடிந்துவிட்டது. அவைகளின்படி உலகிலேயே நடக்கவிருக்கும் காலம் இது. சொல்லித் திருந்தாதவர்கள் பட்டுத் திருந்துவார்கள். பட்டும் திருந்தாதவர்கள் தொலைந்து போவார்கள்.

இமாம் கஸ்ஸாலி (றஹி) என்ன எழுதி ஞர்கள்? ஜக்காத் கொடுக்காதவன் பொருளுக்கு மூன்று வாரிசுகள் உண்டு; அவை நெருப்பு, கொள்ளை, லஞ்சம் முதலிய விவகாரச் செலவு கள் ஆகும் என்று எழுதியுள்ளார்கள். 'இமாம் கஸ்ஸாலி (றஹி) எழுதியிருந்தால் என்ன? நான் ஜக்காத் கொடுக்கவில்லை; அப்படி இருந்தும் என் சொத்து அழியாமல்தானே இருக்கிறது; பணம் சேர்ந்து கொண்டுதானே இருக்கிறது!' என்று எவரும் கூறுவாராயின், இனி என்ன நடக்கவிருக் கிறதென்பதைப் பார்த்துக் கொள்ளட்டும். குட்டி அக்கினிப் பிரளயங்களின் சகாப்தம் ஆரம்பிக்கிறது; அதில் சொறப்பக் கொட்டுகளுடன் திருந்திக்கொள் பவர்கள் அதிஷ்டசாலிகள். திருந்துபவர்களே யன்றி மற்றவர்கள் பெரும் அக்கினிப் பிரளயத் திலிருந்து தப்பமாட்டார்கள். இந்த ஹதீஸைப் பன்முறை படியுங்கள் :

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அருளிஞர்கள்: "ஜக்காத்தைக் கொண்டு உங்கள் சொத்துக்களைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள்; ஸதகாவைக் கொண்டு உங்களுக்கு ஏற்படக்கூடிய பிணிகளை நிவர்த்தி செய்து கொள்ளுங்கள்; "பலா" (சோதனை) ஏற்படும் போது "துஆ"வைக்கொண்டு உதவி பெற்றுக் கொள்ளுங்கள்."

[இப்னு மஸ்ஊது (றலி) ரிவாயத்துச் செய் ததாக "திப்ரானி"யிலும் அபூ நயீமுடைய கிரந்தத் திலும், கத்தீபின் ஹதீஸ் கிரந்தத்திலும் உள்ளது. அத்துடன் ஹஸன் (றலி) ரிவாயத் செய்ததாக அபூ தாவூதின் ஹதீஸ் கிரந்தத்தில் உள்ளது. ஒவ்வொரு முஸ்லிமும் கூர்ந்து வாசித்து, சிந்திக்க

வேண்டிய மூன்று பெரும் தத்துவங்களைக் கொண்ட நபி மொழி இது.]

இதில் பெருமானார் (ஸல்) மூன்று விஷயங்களைக் குறிப்பிட்டுள்ளார்கள். அவை ஜக்காத், ஸதகா, துஆ ஆகும். ஜக்காத் எனும் தருமத்தின் விதிகளும் உண்டு; ஸதகா என்பதன் விதிகளும் உண்டு; துஆ என்பதை சதா அர்த்தம் தெரியாமல் ஓதிக்கொண்டு ஒன்றையும் கண்கூடாகக் காணுமல் இருப்பதற்குப் பதிலாக துஆ கொண்டு கண்கூடாகப் பலன் அடைவதற்குரிய வழிகளும் உண்டு. எல்லாவற்றையும் அல்லாஹ், நீங்கள் அர்த்தம் தெரியாமல் ஓதிக் கொண்டிருக்கும், திரு குர்ஆனில் சொல்லித்தான் இருக்கிறுன்; அவற்றின் வியாக்யானங்களும் ஆத்மார்த்தங்களும் தத்துவ விளக்கங்களும் ஹதீஸ் கிரந்தங்களில் நிறைந்து கிடக்கின்றன. எனினும், குர்ஆன் ஹதீஸ் எனும் பொக்கிஷங்களை வைத்துக் கொண்டும் பயன் பெற முடியாத நிலைமையில் இருந்து வருகிறோம்.

பாதுகாப்பு-ஆண்டவனுல் வாக்களிக்கப்பட்ட பாதுகாப்பு-அவசியமாகிக் கொண்டிருக்கும் காலமிது; அதற்குரிய தர்மமென நபி (ஸல்) வர்ணித்துள்ள ஜக்காத் விஷயத்தில் இனியும் அலட்சியம் கூடாது. பிணிகள் ஏற்படவிருக்கும் காலமிது; பிணி நிவர்த்திக்குரிய ஸதகா எனும் தர்மத்தின் சரியான வழிகளையும் அறிய வேண்டும். அதுபோலவே, 'துஆ' என்பது என்னவென்பதுபற்றிய இஸ்லாமிய ஞானத்தையும் அடைய வேண்டும். எதைக் கேட்பது எப்படிக் கேட்பது என்பது பற்றி அல்லாஹ்வின் தூதர் தெளிவாகக் கற்பித்துக்கொடுத்துள்ளார்கள். கேட்கக்கூடியதை முறைப்படி கேட்டால் உடனே கிடைக்

கும். நாம் வணங்கும் அல்லாஹ் கல் அன்று. பொம்மை அன்று; செவிடன் அன்று. திருகுர்ஆனில் கொடுத்துள்ள வாக்குகளை மீறுபவன் அன்று; (இன்னல்லாஹ-லா-யுக்லிபுல்-மீஆத்). எனினும், அரசாங்கம் என்றால் அரசாங்க விதிகளும் உண்டல்லவா! எதற்கு அரசனுக்கு நேர்முகமாக மகஜர் செய்யலாம், எப்படி மகஜர் அனுப்ப வேண்டும் என்று சட்டம் பிறப்பிக்கப்பட்டபின், சட்டங்களைத் தெரியாமல், அரசனே, அரசனே, என்று அர்த்தம் தெரியாமல் என்னென்னவோ சொல்லிக் கொண்டிருந்தால் கிறுக்கன் என்பார்களா, அல்லது அரசனைப் பரிகசிப்பவன் என்பார்களா? யோசித்துப்பாருங்கள்!

## இம்மையிலேயே நீதித் தீர்ப்பு

பூமி ஒரு தடவை தன்னைச் சுற்றிக் கொள்வதற்கு 24 மணி நேரம். அத்தகைய ஏழு நாள் கொண்டது ஒரு வாரம். சந்திரன் பூமியைச் சுற்றி முடிப்பதற்கு இருபத்தொன்பதரை நாள். அத்தகைய பன்னிரு மாதம் கொண்டது ஒரு வருடம். பூமியின் வேகத்திலோ சந்திரன் வேகத்திலோ மாறுதல் இல்லை. பூமியையும், சந்திரனையும் சூரியனையும் கிரகங்களையும்விட உயரிய சிருஷ்டி எனப்பட்ட மனிதனின் ஜீவியத்தின் வேகத்தில்தான் மாறுதல்கள் விளைந்துள்ளன. கிரகங்களின் சுடர்கொண்டு மட்டும் மனித ஜீவியம் நடைபெறுவதாயின், இந்த மாறுதல்கள் ஏற்படவேண்டியதில்லை.

மனிதனோ கிரகங்கள் உட்பட்ட சடதத்துவப் பொருட்களின் ஆதிக்கத்தில் மட்டும் உள்ளவனாக இல்லை. சடதத்துவப் புலனுக்கெட்டாத சில

விஷயங்களும் மனித ஜீவியத்தில் பங்கெடுத்துக் கொண்டிருக்கின்றன. இதனாலேயே திரு·குர்ஆன்,

**ப-லா-உக்ஸிமு-பி-மவாகி யின்-னுஜூம்.**

(கிரகப் பெயர்ச்சிகளின் கணிதம் கொண்டு மட்டும் மனிதனுடைய தலைவிதிப் பங்கீடுகள் நடைபெறுவதாக இல்லை) என்ற கருத்தைப் புகட்டுகிறது.

மனிதன் ஓர் அதிசய சிருஷ்டி. அவனிடம் சடதத்துவ சக்திகளின் நடுவே இருக்க வேண்டிய சடதத்துவமும் உண்டு; சடதத்துவத்துக்குக் கட்டுப்படாத ஆத்மாவும் உண்டு. கிரகங்களின் சுடர்கள் சடதத்துவத்தை மட்டும் பாதிக்கக் கூடியவை. இவைகளில் சுபக் கிரகங்களும் உண்டு; பாபக் கிரகங்களும் உண்டு. இதேபோல், ஆத்ம சக்தியும் உண்டு; ஷைத்தான்கள் எனப்படும் பாப சக்தியும் உண்டு. சடதத்துவத்தை மட்டுமன்று, ஆத்மீகக் கிரகங்களின் சக்திகளெனக் கூறக்கூடிய மலக்கு, ஷைத்தானையும் மிகைக்கும் சக்தி மனிதப் பிறவிக்கு உண்டு. மலக்குகளும் ஆதம் அலைஹிக்கு அடிபணிய நேர்ந்த விபரம் திரு குர்ஆனில் கூறப்பட்டிருப்பது இதைக் காட்டுவதற்கே. சிருஷ்டிக் கர்த்தன் ஒருவனைத் தவிர, எச்சக்திக்கும் கட்டுப்படாது இருக்கும் உரிமை மனிதப் பிறவிக்கு உண்டு. இதுவே இஸ்லாத்தின் 'தவ்ஹீது' எனப்படுவது.

**வ-லகத்-கலக்னல்-இன்ஸான- பீ-அஹ்ஸனி-தக்வீம்**

(மஹோன்னத அம்சத்துடன் மானிடன் சிருஷ்டிக்கப்பட்டான்); என்றாலும்,

**தும்ம-ரதத்னாஹு-அஸ்பல-ஸா-பிலீன்**

(அதிகக் கீழான நிலையில் கொண்டு வந்து வைக்கப்பட்டான்) ஏன்? சடதத்துவ சக்திகளுக்குக்

கட்டுப்பட்ட நிலைமையிலிருந்து தன்னுடைய பிறப்புரிமையாகிய மஹோன்னதத்தின் பக்கம் உயருவதற்காகவே.

மானிடர்கள் உலகில் தோன்றும் நிலையிலிருந்து அவர்கள் மேலே ஏறவும் முடியும்; கீழே இறங்கவும் முடியும். பிறப்புரிமையாகிய சுவர்க்கத்தை இம்மையிலும் மறுமையிலும் அடையவும் முடியும்; இம்மையிலும் மறுமையிலும் நரகத்துக்கு உரித்தானவர்களாக ஆகவும் முடியும். இம்மையில் அனுபவிக்கக்கூடிய சுவர்க்கமும் இருக்கிறது; மறுமையில் அடைவதற்குரிய சுவர்க்கமும் உண்டு. இம்மையில் அனுபவிக்கக்கூடிய நரகமும் உண்டு; மறுமையில் அடைவதற்குரிய நரகமும் உண்டு. 'இதனாலேயே முஸ்லிம்கள்,

**ரப்பனா-ஆத்திநா-பித்துன்யா-**

**ஹஸனத்தன்-வ-பில்-ஆகிரத்தி - ஹஸனத்தன்-வ-**

**கினா அதாபன்னார்.**

(இறைவனே, இந்த உலகில் நன்மைகளையும் மறுமையில் நன்மைகளையும் கொடுத்தருள்வாயாக! நராகாக்கினியிலிருந்து ரட்சித்து அருள்வாயாக!) என்று 'துஆ' ஓதுகிறார்கள்.

ஓர் ஆண்டு முடிந்து, மறு ஆண்டு ஆரம்பிக்கும் சமயத்தில் வர்த்தகர்கள் கணக்கு முடித்து லாப நஷ்டக் கணக்கு எடுக்கிறார்களல்லவா! அதுபோல கடந்த ஆண்டில் செய்த நன்மை தீமைகளின் ஆத்மீக விலை மதிப்புடன் ஒவ்வொருவரும் கணக்கிட்டுப் பார்த்தலும் அவசியம். சாப்பிட்டதும், தூங்கியதும், உழைத்ததும், ஓய்வெடுத்ததும் இருக்கட்டும். அவைகள் தினசரிக் கடன்கள். மானுஷீக ஜீவியம் எனும் யந்திரம் ஓடுவதற்கு வேண்டியவை. ஒரு

மோட்டாரை எடுத்துக் கொள்ளுங்கள். அதற்குப் பெட்ரோல் வேண்டும்; என்ஜின் எண்ணை வேண்டும்; ஆவிலிட் வேண்டும்; டயர் வேண்டும். இதெல்லாம் இருந்தால் வண்டி ஓடும். வண்டியைக் கொடுத்தான், அது கொண்டு சில வேலைகளை முடிப்பதற்காக. ஒரு வருடத்துக்குப் பின், என்ன வேலையை முடித்தாயென்று கேட்டால், “இத்தனை காலன் பெட்ரோல் சம்பாதித்துவிட்டு என்ஜினை ஓட வைத்துக் கொண்டிருந்தேன்; மேல் மிச்சமாக இவ்வளவு காலன் வைத்திருக்கிறேன்” என்றால் முடியுமா? ஆகையால், வயிறு எனும் என்ஜினுக்குப் பெட்ரோல் ஊற்றியது இருக்கட்டும். அல்லாஹ்வின் ரஸூல் உங்களுக்குக் கொடுத்துள்ள போதனைகளின்படி, நீங்கள் நிறைவேற்றியுள்ள வணக்கங்கள், தீனுக்காகச் செய்த காரியங்களை நினைத்துப் பாருங்கள். அவற்றில் நஷ்டக் கணக்கு முடித்து, வேறு எந்தக் கணக்கில் லாபத்தை முடித்துக் கொண்டாலும் வீணே. மறு ஆண்டு திருந்துவோம், முன்னைவிட அதிகமாக தீன் காரியத்தைக் கவனிப்போம் என்று தீர்மானம் செய்து நிறைவேற்றினால், சென்ற ஆண்டுகளின் நஷ்டக் கணக்கை எஜமானனாகிய அல்லாஹ் மன்னித்து அருளக்கூடியவன் என்பதை அறிந்து, இந்த ஆண்டில் முந்திய ஆண்டுகளைவிட அல்லாஹ் ரஸூலின் உத்தரவுகளை அதிகமாக நிறைவேற்றுவோம் என்று பிரதிக்ஞை செய்வீர்களாக. பிரதிக்ஞையை நிறைவேற்றவும் முயற்சிப்பீர்களாக!

தனிப்பட்ட வாழ்வில் யாஸீன் ஸூராவில் உள்ள கருத்துக்களையும் தத்துவங்களையும் அரபி நன்கு கற்றவர்களிலும் பலர் அறிய முயலுவதில்லை. இம்மையில் குருடாக இருப்பவர்கள் மறுமையிலும் குருடராக இருப்பார்கள். (மன்-கான-பீ-ஹாதிஹி-

அஃமா - பஹ ா வ-பில் - ஆகிரத்தி - அஃமா) என்று திரு குர்ஆன் எச்சரித்ததை மறந்து அவர்களும் அகக் குருட்டுடனிருந்து மற்றவர்களையும் குருடாராக இருக்கச் செய்துவிடுகிறார்கள். **அத்துன்யா-மஜ்ர அத்துல்-ஆகிரத்** (மறுமைக்குரிய விளைவு ஸ்தலம் இம்மை) என்பது ஹதீஸ். கடைசியில் உங்கள் கப்ருஸ்தானில் வந்து யாஸீனை ஓதுவார்கள். விளைவு ஸ்தலத்தில் இருக்கையில் எங்ஙனம் வித் திட்டு ஆத்மீகத்தை விளைத்துப் பரிபக்குவத்தை அடையச் செய்வது என்பதைத் தெரிய வைக்கா மல், விளைவு ஸ்தலத்திலிருந்து வெளியேறிய பின், விளைவு ஸ்தலத்தில் இப்படி இப்படி வித்துக்கள் இட வேண்டுமென்று அழகாக ஓதுவார்கள். தனிப்பட்ட ஜீவியத்துக்குரிய இஸ்லாமிய போதனை இங்ஙனம் இருள் சூழ்ந்து கிடக்கையில், நடந்துவரும் பிரளய சகாப்தம் பற்றிய திரு குர்ஆன்-ஹதீஸ் போதனை களை முஸ்லிம்கள் ஏடுகளில் கட்டி பத்திரமாக வைத்திருப்பின் அதிசயம் என்ன! மவுத்தான பின் மவுத்தாகாது இருப்பவர்கள் யாஸீன் ஓதி தானம் செய்வது போல், பிரயாணத்தில் அடிபட்டுக் கொண்டு நாசமாகப் போகிறவர்கள் தவிர, மிஞ்சு பவர்கள், திரு குர்ஆன், ஹதீஸில் உள்ள பிரளய சகாப்த விமோசன போதனைகளை நாசமானவர் களுக்குத் தானமாகவும் ஞாபகார்த்தமாகவும் ஓதிக் காட்டுவார்கள் போலும்!

இதுகாறும், இஸ்லாமிய ஷரீஅத்படி நடப்ப தற்கு இம்மையில் கைக்குமேல் கூலி கிடைக்கா திருந்து வந்தது; அதை மீறுபவர்களுக்கு உடனே ஆக்கினை இம்மையில் கிடைக்காமல் இருந்து வந் தது. செத்த பின்னர் தானே அதன் நன்மை தீமை தெரியுமென்ற நினைவில் அநேகர் பொடுபோக்காக

இருந்திருக்கக் கூடும். நீதித் தீர்ப்பு எல்லாம் மறுமையில் மட்டும் பார்த்துக்கொள்ளும் வரம் உள்ளவர்களாக முன்னவர்கள் இருந்தார்கள். இப்போதோ இம்மையிலும் நீதித் தீர்ப்பைக் கண்டுகொள்ளவேண்டிய வரம் உள்ளவர்களாக நாம் இருக்கிறோம். ஒரு வழியில் நாம் முன்னவர்களைவிடக் கொடுத்து வைத்தவர்களே. ஏனெனின், இம்மையிலேயே கணக்குப் பார்க்கப்பட்டு விடுவது மறுமையில் கணக்குப் பார்க்கப்படுவதைவிட ஒரு வழியில் மேலான விஷயம். மௌலானா முஹம்மது அலி (றஹி) ஒரு கவியில், "மறுமையின் கேள்வி கணக்குக்குத் தப்பிக்க முடியுமாயின் ஆண்டவனே, இம்மையிலே எனக்கு ஆக்கினைகள் ஏற்படட்டும். அந்நிய நாடாகிய இம்மையில் அவமானம் ஏற்படில் பரவாயில்லை. சுயநாடாகிய மறுமையில் எனக்கு அவமானம் கூடாது" என்ற கருத்துடன் பாடினார்கள். இம்மையில் பாவ மன்னிப்புப் பெறுவதற்கும், திருந்திக் கொள்வதற்கும் அவகாசம் உண்டு என்பதையும் நாம் மறக்கக் கூடாது.

## கேடுகள் தொடங்கிய சரிதை

ஸஹாபாக்களில் அரசியல், உலக வருங்காலம் பற்றிய ஹதீஸ்களை அதிகமாகப் பத்திரப்படுத்திக் கொடுத்தமகான் ஹுதைபா இப்னு யமானீ(றலி) ஒருவர் ஆவர். அவர் ரிவாயத்துச் செய்த ஒரு ஹதீஸ் கன்ஜுல் உம்மால், ஆறுவது வால்யம், 54-வது பக்கத்தில் உள்ளது. அதாவது,

**அன்-ஹுதைபா-கால்-அவ்வலுல்-பித்னத்தி-கத்லு-உஸ்மான்-வ-ஆகிருஹா-குருஜுத்-தஜ்ஜால்.**

"முதல் கேடு ஆரம்பிப்பது உதுமான் கொல்லப் படுவதைக் கொண்டும் இறுதிக் கேடு தஜ்ஜாலின் எழுச்சி கொண்டும் தொடங்கும்."

நபிகள் நாயகம் (ஸல்), அவர்கள் வருங்காலம் பற்றி மொழிந்த ஹதீஸ்களை மூன்று பகுதிகளாகப் பிரிக்கலாம். ஒன்று, கேடுகளும் விஷமங்களும் தலை யெடுத்துச் சிறுகச் சிறுக அதிகரித்துச் சிறிய கியா மத்துக்கு முன் தஜ்ஜால்களுடைய ஆர்ப்பாட்டங்க ளில் உச்சம் அடைவது பற்றிய தீர்க்கதரிசனங்கள். இரண்டு, சிறிய கியாமப் பிரளயமும் சத்தியத்தின் இறுதி வெற்றியும் உலகில் இஸ்லாமிய வெற்றிக் கொடி நாட்டப்படும் சகாப்தமும் பற்றிய தீர்க்க தரிசனங்கள். மூன்று, இந்தச் சகாப்தம் நடந்து முடிந்தபின் உலகம் அழிந்து பெரிய கியாமம் ஏற்படுவது. முதலாவது கூறிய கேடுகளை யும் விஷமங்களையும் நபிகள் நாயகம் (ஸல்) 'பித்னு'க்கள் என்று வர்ணித்துள்ளார்கள். இந்த பித்னுக்களின் ஆரம்பம் உதுமான் (றலி) கொலை செய்யப்படுவது என்றும், உச்சம் தஜ்ஜாலின் ஆர்ப் பாட்டம் என்றும் கூறினார்கள். அவர்கள் இவ்விதம் மொழிந்ததைச் செவியுற்ற ஹஜ்ரத் உதுமான் (றலி) தனது முடிவு சத்தியத்துக்காக உயிர் கொடுக்க நேரிடுதல் என்பதை உணர்ந்து கொண் டார்கள். இதர ஸஹாபாக்களும் அதுபோலவே தெரிந்து கொண்டனர். எனினும், அச்சமயத்தில் இது எப்படி நடக்கும் என்பதை ஸஹாபாக்கள் கனவிலும் அறிய முடியாதிருந்தது.

மதீனு உண்டாயிற்று. அல்லாஹ்வின் ஆட்சி உலகில் ஸ்தாபிக்கப்பட்டதற்குத் தலை நகராக மதீனு விளங்கியது. ஹஜ்ரத் அபூபக்கர் (றலி), ஹஜ்ரத்

உமர் (றலி) ஆகியவர்களின் கிலாபத்துடைய காலத்தில் அந்த மதீனு சீர்குலேயாதிருந்தது. எனினும், ஹஜ்ரத் உதுமான் (றலி) யின் காலத்தில் எலி உள்ளே புகுந்துவிட்டது. முஸ்லிம்களை வெளியிலிருந்து எதிர்த்து மிகைக்க முடியாதென்பதை சாத்தானிய சக்திகள் உணர்ந்தன; உள்ளே நுழைந்து கெடுப்பதற்குச் சூழ்ச்சிகள் செய்தன.

ஈஸா நபி ஏகதெய்வக் கொள்கையைத் தான் போதித்தார். பிறகு ஸால் எனும் ஒரு யஹூதி கிறிஸ்தவனுகி 'பால்' என்று பெயர் பெற்று, பக்தன் போல் நடித்து, திரிமூர்த்திக் கொள்கையை உள்ளே புகுத்தியது பழைய கதை. ஈஸா அலேயும் ஸுன்னத்துச் செய்தவராகத்தான் இருந்தார். உடல் சுத்தம் இருந்து மனச் சுத்தம் இல்லாவிடின் என்ன பயன்? மனச் சுத்தம்தான் பெரிது என்று இன்று ஞான மோன மஸ்தான்கள் ஞானம் பேசும் முறையில் பால் என்பவர் பேசி, உடல் சுத்திக்குரிய ஸுன்னத்தை இல்லாமலாக்கி விட்டார். இங்ஙனமே ஈஸா நபியின் இதரப் பல போதனைகளை உருமாறச் செய்தார்.

அதே சேஷ்டையை இஸ்லாத்தின் விஷயத்திலும் இப்லீஸ் செய்தான். வித்தியாசம் என்னவெனில், ஈஸா நபியின் விஷயத்தில் மத போதனைகளை முற்றிலும் மாற்றிவிட அவனுல் முடிந்தது. இஸ்லாத்தின் விஷயத்தில் திரு குர்ஆனையோ ஹதீஸையோ தொட அவனுல் முடியாது போயிற்று. வியாக்யானங்களிலும், அரசியலிலும், சமூக நிலேயிலும் மட்டும் கேடுகளை உண்டாக்க முடிந்தது.

இப்னு ஸபா என்ற ஒரு யஹூதி, ஹஜ்ரத் உதுமான் (றலி) யின் காலத்தில் முஸ்லிமாகி 'அப்துல்லா' ஆனான். சரித்திர நூல்களைத் துருவிப் பார்க்கும்போது, இந்தக் கர்னல் லாரன்ஸ்தான் விஷமத்தனத்தை முதலில் ஆரம்பித்த வைத்தான் என்று ஸ்பஷ்டமாகத் தெரிகிறது.

மக்காவை ஜெயித்து வெற்றிச் சொற்பொழிவு நிகழ்த்தியபோது நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் என்ன முழக்கம் செய்தார்கள்? 'குலம், ஜாதி முதலிய வித்தியாசங்களை இன்று எனது காலடியில் போட்டு மிதிக்கிறேன். எல்லோரும் ஆதமின் மக்கள். ஆதம் மண்ணால் சிருஷ்டிக்கப் பட்டவர்' என்று கூறினார்கள். முஸ்லிம்கள் யாவரும் ஒரே சகோதரத்துவத்தினர் என்று போதித்து விட்டு மறைத்தார்கள். அரபிகளிடமிருந்த குல வித்தியாசங்களையும் குரோதங்களையும் ஒழித்துக் கட்டினார்கள். ஆயினும், அப்துல்லா இப்னு ஸபா, ஸய்யிதுனா உதுமான் (றலி) யின் உமய்யா குடும்பத்தைக் கொண்டு தனது விஷமப் பிரச்சாரத்தை ஆரம்பித்தான். இராக்கில் இருந்த அப்பாஸிய்யா குலத்தில் உள்ளவர்களிடம், மதீனாவில் உமய்யா ஆட்சி உண்டாகிவிட்டதால் அப்பாஸிய்யாக்கள் ஏமாற்றப் பட்டதாக, சாதுக்காகப் பிரச்சாரம் செய்தான். அப்பாஸிய்யாக்கள் உதுமான் (றலி) யின் ஆட்சியைக் கவிழ்க்க முயற்சி செய்து கொண்டிருப்பதாக ஷாம் தேசத்தில் இருந்த உமய்யா குலத்தினரிடையில் பிரச்சாரம் செய்தான். 1914 ல் ஆரம்பித்த மஹா யுத்தத்தில் கர்னல் லாரன்ஸ் தலைப்பாகையும் ஜுப்பாவும் கழுத்தில் தஸ்பீஸ் மாலையும் போட்டுக்கொண்டு அரபிகள் மூளையைக் கெடுத்து

அவர்களைத் துருக்கிகளை எதிர்க்குமாறு செய்த அதே நாடகம் அன்று முதலாவதாக ஆரம்பித்தது. இந்த விஷமப் பிரச்சாரங்களினால் ஏற்பட்ட கிளர்ச்சியால் ஸய்யிதுனா உதுமான் (றலி) கொல்லப் பட்டார்கள். அன்றிலிருந்து ஆரம்பித்த சேஷ்டை தொடர்ந்து நடந்தது. முஸ்லிம் வேஷத்தில் அரசியல் தலைவர்களாகவும் மத போதகர்களாகவும் சாத்தானுடைய கையாட்கள் புகுந்து, தவறிய கருத்துக்கள், தவறிய நினைவுகள், தவறிய ஆசாரங்கள், தவறிய அரசியல் நடவடிக்கைகள், தவறிய வியாக்கியானங்கள், தவறிய சித்தாந்தங்கள், தவறிய ஞானங்கள் முதலியனவற்றைப் புகுத்த ஆரம்பித்தார்கள்.

இவ்வாறு உட்புகுந்த சாத்தானிய சேஷ்டைகளை எதிர்ப்பதற்கு நபியின் உண்மைப் பிரதிநிதிகளாக இருந்த அறிஞர்கள் ஒவ்வொரு காலத்திலும் ஆவனச் செய்து வந்துள்ளார்கள். உதாரணமாகப், பொய் ஹதீஸ்களைச் சிலர் சிருஷ்டித்துக் கட்டிவிட ஆரம்பித்தபோது, இமாம் புகாரி றஹி முதல் பல இமாம்கள் தோன்றி ஹதீஸ் அழியாமலும் மாற்றப்படாமலும் பாதுகாப்பதற்கு ஆவனச் செய்தார்கள். இஸ்லாம் பரவி, தூரத்திலிருந்தவர்கள் திரு குர்ஆன் தெரியாததால் சாத்தான்களினால் வழிபிசகுமாறு செய்யப்படக்கூடுமென்ற கட்டம் வந்தபோது இமாம் அபூ ஹனீபா (றஹி) முதலிய நான்கு இமாம்களும் மார்க்கத்தின் சட்ட திட்டங்களைக் கோவை செய்தார்கள். திரு குர்ஆன் பதங்களின் அசல் அர்த்தங்களை மாற்றச் சிலர் முயற்சித்த போது இமாம் ராகிப் ஹஸன் இஸ்பஹானீ திரு குர்ஆன் பதங்களின் சுத்த அகராதியை எழுதி

முடித்தார்கள். ஹதீஸின் பதங்களைச் சிலர் தப்பர்த்தம் செய்ய ஆரம்பித்தபோது, இமாம் இப்னு அதீர் அவர்கள், ஹதீஸில் உள்ள பதங்களின் அகராதியை எழுதி முடித்தார்கள். நான்கு இமாம்கள் மத்ஹபைப் போதிப்பதில் வெறும் சடங்குடன் மட்டும் பிற்கால போதகர்கள் நின்று கொண்டிருந்த போது, தத்துவார்த்தங்களின் பக்கம் இமாம் கஸ்ஸாலி (றஹி), முஹ்யித்தீன் ஆண்டகை (றஹி) போன்றவர்கள் கவனத்தைத் திருப்பி, அணைந்ததை மறுபடியும் கொளுத்தினார்கள். குர்ஆன் ஹதீஸை விட்டு விட்டு, கிரேக்க ஞான மொழிபெயர்ப்பிலும் இந்திய வேதாந்த ஞான மொழிபெயர்ப்பிலும் முஸ்லிம்கள் மூளையைப் பறிகொடுக்க ஆரம்பித்தபோது இப்னு அரபி போன்றவர்கள் இஸ்லாமிய நுட்பங்களை எழுத ஆரம்பித்தார்கள். அவர் எழுதியதையும் சிலர் தப்பர்த்தம் செய்ய ஆரம்பித்தபோது அதைத் திருத்துவதற்கு முஜத்தித் இமாம் அஹ்மது ஸர் ஹிந்த் தோன்றினர். எனவே, ஹஜ்ரத் உதுமான் (றலி) ஷஹீது ஆன தினத்திலிருந்து ஒரு புறம் இஸ்லாத்தைப் கெடுப்பதற்குள்ள சாத்தானிய முயற்சியும், மறுபுறம் இஸ்லாத்தைப் பாதுகாப்பதற்குள்ள முயற்சிகளும் தொடர்ந்து நடந்து வந்திருக்கின்றன.

கடைசியில் யந்திர சகாப்தம் பிறந்தது; தஜ்ஜாலிய நவ நாகரீகம் பிறந்தது. உலகை தஜ்ஜாலிய சக்திகள் ஆக்ரமிப்பதில் தற்காலீக சித்தி பெற்று, அதைப் பார்த்த முஸ்லிம் உலகம், திரு குர்ஆன் ஹதீஸில் உள்ள பொக்கிஷங்களைத் தேடி அறிந்து அவை கொண்டு தஜ்ஜாலிய சக்தியுடன் எதிர்க்காமல், உலக விஷயங்களில் தஜ்ஜாலிய

சக்தியைப் பின்பற்றுவதாகவும், அச் சக்திக்கு அடிமையாகவும் ஆக முற்பட்டது. திரு குர்ஆன் ஹதீஸின் தத்துவார்த்தங்கள் ஒரு புறம் இருக்கட்டும். "நாம் முஸ்லிம்கள்" என்ற உணர்ச்சியும் இல்லாது போய்விட்டது. அர்த்தமும் தத்துவமும் இல்லாமல் மத ஆசாரங்களை நிறைவேற்றிக் கொண்டு, உலக விஷயங்களில் முஸ்லிம்கள் சுக்கானும் திசைக் கருவியும் அற்ற கப்பல்களாக ஆகிக் கொண்டிருந்தனர். இந்நிலைமையில், முஸ்லிம்களை இப்படுகுழியிலிருந்து ரட்சிப்பதற்காக ஸய்யிது ஜமாலுத்தீன் ஆப்கானி, மௌலானா முஹம்மது அலி ஜௌஹர், அல்லாமா இக்பால், காயிதே ஆஜம் ஜின்னாஹ் முதலிய தொண்டர்களை நூரே முஹம்மதிய்யா உண்டாக்கிக் கொடுத்தது.

கேடுகளின் ஆரம்பத்தின் அறிகுறியாக இருந்தது ஸய்யிதுனா உதுமான் (றலி) யின் புனித இரத்தம் சிந்தியது. கேடுகளின் உச்சம் ஏற்பட்டு முஸ்லிம் உலகின் வலிமை குன்றிப் பல சோதனைகள் ஏற்பட்டு, தஜ்ஜால்களின் ஆர்ப்பாட்டம் உச்ச நிலையை யடைந்து, யஃஜூஜ் மஃஜூஜ் பிரளயம் எனும் அக்கினிக் குண்டம் சமீபித்துவிட்ட காலத்தில் நாம் உலகில் இருந்துகொண்டிருக்கிறோம்.

இதுவரை கண்டிராத, கேட்டிராத அளவுக்குக் காலச் சக்கரம் வேகமாகச் சுற்ற ஆரம்பித்திருக்கிறது. அடுத்த சில ஆண்டுகள் அக்கினிக் குண்டப் பரீட்சையின் காலம். எந்த இஸ்லாமிய ஆத்ம சக்தி பிதா இப்ராஹீம்(அலை)ஐ அக்கினியிலிருந்து ரட்சித்ததோ அந்த ஆத்ம சக்திதான் இச்சகாப்தத்தில் துணைபுரியும்.

## திரு குர்ஆனின் ஒரு சித்திரம்.

திரு குர்ஆனில் இக்காலத்தைப் பற்றிய சொற்சித்திரங்களுள்ள ஸூராக்கள் பல உண்டு. அவற்றில் இதா - ஜுல்ஜிலத்தில் - அர்ளு - ஜில் ஜாலஹா என்ற ஸூராவிலுள்ளதும் ஒன்று. அதை இங்கே பார்க்கலாம்.

இதா - ஜுல்ஜிலத்தில் - அர்ளு - ஜில்ஜாலஹா (பூமி அதன் அதிர்ச்சி கொண்டு அதிரும் காலம் வருமென்பதை ஞாபகத்தில் கொள்ளுங்கள். அது ஒரு சாட்சியாக, அடையாளமாக இருக்கிறது.) வ-அக்ரஜத்தில் - அர்ளு- அத்காலஹா (பூமியின் சுமைகளை, பூமி வெளியேற்றப் போகும் காலத்தை ஞாபகத்தில் வையுங்கள்!) வ-காலல் - இன்ஸானு-மா-லஹா (அச்சமயத்தில், மானிடர் இது என்ன அதிசயமாக நடக்கிறது, இது என்ன விபரீதமாக இருக்கிறது, பூமிக்கு என்ன ஆகிவிட்டது என்று கூறும் காலம் அது!) யவ்மயிதின் - துஹத்திஸு-அக்பாரஹா (அந்த சாகப்தத்தில் பூமி தன் செய்திகளைத் தானே நடத்திக் காட்டும் காலம் அது!) பி-அன்ன-ரப்பக்க-அவ்ஹா-லஹா (அதன் இறைவன் ஏதோ அதற்கு வஹியைக் கொடுத்து அந்த வஹி-உதிப்பைக்-கொண்டு நடப்பது போல் பூமி நடந்துகொள்ளும் காலம் அது.) இந்த நான்கு ஸ்லோகங்களில் உள்ளது ஒரு சொற்சித்திரம். இதரப் பல சொற்சித்திரங்கள் திரு குர்ஆனின் இதர ஸூராக்களில் இருக்கின்றன.

இவ்வாறு அடையாளங்கள் ஏற்படும் போது, அது எந்தச் சகாப்தத்துக்கு—காலத்துக்கு- அறிகுறி என்பதை அதே ஸூராவில் உள்ள அடுத்த ஆயத்

துகள் கூறுகின்றன. யவ்மயிதின்-யஸ் துருன்ஞஸ—அஷ்த்தாத்தன்-லி-யுரவ் - அஃமாலஹூம் (அக்காலத்தில் மனிதர்கள் பிரிவு பிரிவுகளாகத் திரட்டப்படுவார்கள், தத் தம் வினைப்பயன்களைக் கண்டு கொள்வதற்காக). ப-மன் - யஃமல்-மித்கால-தர்ரத்தின் - கைரன் - யரா; வ - மன் யஃமல் -மித்கால - தர்ரத்தின் ஷர்ரன் - யரா (அப்பொழுது அணு அளவு நன்மை செய்தவனும் அந்த நன்மையின் பயனைக் கண்டு கொள்வான்; அங்ஙனமே ஓர் அணு அளவு தீமை செய்தவனும் அதன் பயனைக் கண்டு கொள்வான்.)

இவை சிறிய கியாம சகாப்தம் பற்றிய திரு குர் ஆன் ஆயத்துகளிற் சில. சிறிய கியாமம் என்பது இப்பூவுலகிலேயே அல்லாஹ்வின் தீனுக்கு (சட்டத்துக்கு) முரணானது இருக்க முடியாது தகர்ந்து, அல்லாஹ்வின் தீன் உலகிலேயே நிலை பெற வேண்டியதற்குரிய சகாப்தம்.

வருங்காலம் பற்றி எச்சரிக்கப்படுவதற்குரிய காலம் கடந்துவிட்டது. 1372 ஆண்டுகளாகப் போதனைகளும் எச்சரிக்கைகளும் அச்சமூட்டுதல்களும் நடந்து வந்திருக்கின்றன. திரு குர்ஆன் வசனங்கள் அவற்றை ஓதிக் கொண்டிருக்கையில் என்னென்ன சம்பவிக்குமென்று எச்சரித்து வந்தனவோ அந்த எச்சரிக்கைகளின்படி இனி விஷயங்கள் நடக்கப் போகின்றன. திரு குர்ஆனின் எச்சரிக்கைகள் உலகம் முடிந்தபின் ஏற்படவிருக்கும் சம்பவங்களைப் பற்றித் தானே என்ற நினைவில் மேலே கூறப்பட்டதைச் செவியில் வாங்கி மனத்தில் இடம் கொடாதவர்களும், திருந்திக் கொள்ளாதவர்களும் மிகப் பலருண்டு. உலகம் அழிந்தபின் ஏற்படப்

போகும் பெரிய கியாமம் ஒருபுறமிருக்கட்டும். இவ்வுலகிலேயே ஏற்படவிருக்கும் சிறிய கியாமம் நடைபெறுவதை நாமும் நமது சந்ததிகளும் காணவிருக்கிறோம். எத்தகைய மனமும் குணமும் ஆத்மாவும் நடத்தையும் இருக்க வேண்டுமோ அது இல்லாதிருக்கும் சமூகங்களைப் பூமி சுமக்க மறுக்கப் போகும் காலம் இது. அவ்வாறு ஆண்டவனின் ஆட்சியை உலகிலும் நிலை நிறுத்த பூமியும், வானமும், மழையும், அக்கினியும் கங்கணம் கட்டிக்கொண்டு நிற்கின்றன என்பதை உணராது, சாத்தானிய சக்திகள் தங்களுக்கு எஞ்சியுள்ள ஆயுள்வரை தலைவிரித்தாடப் போவதால் ஏற்படும் உபத்திரவங்கள் ஒருபுறம்; இயற்கை காலம் மாறிவிட்டதைக் காட்ட முனைவதால் ஏற்படும் தொல்லைகள் ஒருபுறம். விமோசன வழி ஒன்றுதான்! அல்லாஹ்வின் சித்தம் என்ன, திட்டம் என்ன, சட்டம் என்ன. என்பதை அறிந்து, அதன்படி நம்மைத் திருத்திஅமைத்துக் கொள்வதுதான் அவ்வழி.

## அக்கினிப் பிரளயம்

திரு குர்ஆனின் இறுதி 'அம்மயத்' ஜுஸுவில் 'வஸ்ஸமாயி-தாத்தில்-புரூஜ்' என்று ஆரம்பிக்கும் ஸூராவில் தீர்க்கதரிசனம் செய்யப்பட்ட சகாப்தத்தில் மறு பிர்ஔளன்கள் தலையெடுப்பது பற்றியும் சொல்லப்பட்டிருக்கிறது; மூமின்கள் அநியாயக்காரர்களால் சோதனைகளுக்கு உட்படுத்தப்படுவரென்றும் கூறப்பட்டிருக்கிறது. எனினும், எந்தச் சூழ்நிலைகளைச் சதமாக நினைத்து சாத்தானிய சக்திகள் தலைவிரித்தாடுமோ அந்தச் சூழ்நிலைகள் அல்லாஹ்வின் அதிகாரத்துக்குட்பட்டவை! சகலமும்

'லௌஹுல் - மஹ்பூள்' என்று முஸ்லிம்கள் அழைக்கும். விதிவசப்பட்டோலையில் உள்ளவை தான். திருகுர்ஆனில் அந்தப் பட்டோலையும் மறைந்திருக்கவே செய்கிறது.

ஆரம்பித்துள்ள பிரளய சகாப்தம் பற்றி திருகுர் ஆனின் ஸ்லோகங்களிலும், ஹதீஸில் உள்ள விளக்கங்களிலும் தீர்க்கதரிசனங்கள் - கண்ணுள்ளவர்கள் பார்த்துக் கொள்வதற்கு-நிறைந்து கிடக்கின்றன. இந்த அக்கினிப் பிரளயம் கொண்டு உலகமோ மானிட வர்க்கமோ அழிந்து விடுவதற்கில்லை. எதையோ நினைத்துக்கொண்டு யாரும் நெருப்பு மூட்டினாலும் அவர்கள் நினைக்கிறபடி நாசம் ஏற்படாது. நெருப்பு மூட்டிப் பிறரை அழிக்க நினைப்பவர்கள் நெருப்புக் கிரையாவதையும் உலகம் பார்க்கப் போகிறது. கடும் ஆபத்துக் கிலக்கானவர்கள் என்று நினைக்கப்பட்டவர்கள் தப்பிப்பதையும் உலகம் பார்க்கப்போகிறது. நம்ரூது, இப்ராஹீம் நபியை அக்கினிக் குண்டத்தில் எறிந்த போது, சுற்றிலும் நெருப்பு ஜ்வாலைகளிருக்க இப்ராஹீம் அலை இருந்த இடம் குளிர்ந்ததாக ஆகிவிட்டதே போல், அங்கும் இங்கும் நெருப்புப் பற்ற, நடுவே நெருப்புப்படாது தப்பித்துக்கொள்ள விருக்கும் தனிப்பட்ட நபர்களும், ஊர்களும், நகர்களும், ஜில்லாக்களும், நாடுகளும் உண்டு. அணுக்குண்டுகளைச் செய்து அடுக்கிக் கொள்ளட்டும்; ஜலவாயுக் குண்டுகளை உண்டாக்கட்டும். அக்கினி வாயுக் குண்டுகளைச் செய்து கொள்ளட்டும். அழிவதற்கிருப்பவர்கள் - யாருக்கு அழிவு என்பது எழுதப்பட்டிருக்கிறதோ, அவர்கள் - தாம் அழிவார்கள். அழியாது தப்பித்துப் பிரளயத்துக்குப் பிந்திய புதிய சகாப்தத்தை-பொன்மயமான சகாப்

தத்தைக் காணக் கொடுத்துவைத்துள்ள மனிதர்களும் சமூகங்களுமுண்டு. ஸூரா அன்பியாவில் ஏற்படவிருக்கும் அக்கினிப் பிரளயத்தை வர்ணிக்கும் சில ஆயத்துக்கள் இருக்கின்றன.

"நீங்களும், அல்லாஹ் தவிர நீங்கள் லட்சியங்களாகக் கொண்டிருந்தவைகளும் நரகத்தில் எரிகட்டையாகி விடுவீர்கள். அனைவரும் அங்கு வந்து சேருவீர்கள். நீங்கள் கொண்டிருந்த லட்சியங்களும் வணங்கிய தெய்வங்களும் உண்மையானவைகளாக இருப்பின், இங்ஙனம் வந்து சேரமாட்டார்கள். எனினும், எவர்களுக்கு அவர்களின் நல்வினைப் பயன்களினால் நம்மால் நன்மைகள் எழுதப்பட்டிருக்கின்றனவோ, அவர்கள் அதிலிருந்து தூரமாக இருப்பார்கள். அதன் இரைச்சலையும் அவர்கள் செவியுற மாட்டார்கள்; விரும்பிய சுகபோகங்களை நிரந்தரமாக அனுபவித்துக் கொண்டிருப்பார்கள். அந்தப் பெரும் திடுக்கம் அவர்களைப் பாதிக்காது. மலக்குகள் அவர்களைச் சந்தித்து, 'தீர்க்கதரிசனம் செய்யப்பட்ட சகாப்தம் இதுதான்' என்று கூறுவார்கள்".

இச்சில ஆயத்துகளில் கூறப்பட்டிருக்கிறபடி தாமும், தாம் கொண்ட கோலங்களும், கொள்கைகளும், பூஜித்த தலைவர்களும், அக்கினியின் எரி கட்டையாகிவிடவிருக்கும் இடங்களும் இருக்கின்றன; நெருப்புப் படாமல், பிரளயத்தின் அமளி இல்லாமல், திடுக்கங்களுக்குக்கூட இடம் இல்லாது, தப்பிக்கவிருக்கும் இடங்களும் இருக்கின்றன. காப்பாற்றப்படும் தக்தீருள்ளவர்கள் ஆபத்து ஏற்படவிருக்கும் இடத்தில் இன்று இருப்பினும் விதிவசம் பிரளயத்துக்கு முன் சொற்ப கொசுக் கடிகளான

தொல்லைகளைக் கொடுத்தேனும் அவர்களை இடம் மாற்றச் செய்துவிடும். எங்கெந்த இடங்கள் தப்பிக்கப் போகிறவை என்பதும் லௌஹுல் மஹ்பூளில் எழுதப்பட்டு, அதன் எதிரொலிகள் திருகுர்ஆனின் மறை பொருள்களாக இருந்து வருகின்றன. பத்திரிகைளில் எத்துணை பீதி தரத்தக்க செய்திகள் வெளியானாலும் அது கொண்டு மூன்ருவது மஹாயுத்தம் எனும் அக்கினிப் பிரளயம் சமீபித்துவிட்டதாக யாரும் நினைக்க வேண்டியதில்லை. மூட்டுவதற்கு எவர்கள் விரும்பினுலும் அவர்களைக் கண்ணுக்குத் தெரியாத ஒரு சக்தி தட்டிக்கொண்டிருக்கப் போகிறது. இடையில், குளிர்ந்த யுத்தம் என்ற பேரில் சிண்டு மூட்டுதல்களும், ஐந்தாம்படை சேஷ்டைகளும் போக்கிரித்தனங்களும், உள் நாட்டுக் கலவரங்களும், உள் நாட்டு யுத்தமும், குட்டி அரசுகளுக்கிடையில் குட்டி யுத்தங்களும் நடைபெறப் போகின்றன. ஒரேமாதம் தேதியில் இத்தகைய அமளிகள் மேற்கிலிருந்து கிழக்கு வரை பல நாடுகளில் ஏற்படினும் அதிசயப்படக்கூடாது. ஆனல் இவ்வாறு குப் குப் என்று பிடிக்க இருக்கும் நெருப்புக்களில் அனேகம் சீக்கிரத்தில் அணைந்துவிடக் கூடியவை. அவைகளினல் ஏற்படக்கூடிய கஷ்டங்கள் பின்னல் நடக்கவிருக்கும் நாடகத்தின் முன்னல் கொசுக்கடிகள் போன்றவை. எனினும், இத்தகைய சில இடங்களில் உண்டாவது நாட் கணக்கில் அணைந்துவிடக் கூடிய சொற்ப நெருப்பாயினும், நல்ல விதியற்றவர்கள் பீதிக்கு ஆளாகி, நிலையை உணராது, தேவையற்ற முறையில் இடம் மாற முயன்று தங்களுக்குத் தாங்களே கேடுகளை விளைவித்துக் கொள்வார்கள்.

"இஸ்லாம்" என்பது வெறும் ஏட்டுச் சுரைக் காயன்று. இறந்த பின் ஏற்படவிருக்கும் சுவர்க் கம் அடையும் வழியையும் நரக விமோசன வழி யையும் மட்டும் போதிக்கும் மதமன்று. இவ் வுலக ஜீவியத்தில் ஏற்படவிருக்கும் பிரசினைகள் சகலவற்றுக்கும் வழிகாட்டி அருளிய ஆண்டவ னின் மார்க்கம். ஆயினும், முஸ்லிம்கள் என்று தம்மை அழைத்துக் கொள்பவர்களில் எத்தனை பேர் திரு குர்ஆனையும் ஹதீஸையும் அறிந்திருக்கி றார்கள்? அல்லது அறியும் ஆவலும் அதற் குரிய கவலையும் முயற்சியும் உள்ளவர்கள் எத்தனை பேர்? நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் போதித் தவைகளில், "பலா" எனும் கஷ்ட நஷ்டங்களிலி ருந்து விமோசனம் பெறுவதற்குள்ள வழிகள் பற்றி, ஏற்படவிருக்கும் ஆபத்துகளை முன்னறிந்து வருமுன் காப்போன் ஆவதுபற்றி அவர்கள் உப தேசித்திருப்பதை அறிந்திருப்பவர்கள் எத்தனை பேர்? ஏற்பட்டுக் கொண்டிருக்கும் பிரளயத்துக்கு முந்திய குட்டிப் பிரளயங்களின் சகாப்தத்தில், இஸ்லாத்தின் ஆத்மார்த்தங்கள், உலகில் பாது காப்புப் பெறுவதற்கும் ஸ்திரம் பெறுவதற்கும் இன்றியமையாதவைகளாகிக் கொண்டிருக்கின்றன. இன்று உலகிற்கு முஸ்லிம்கள் செய்து காட்ட வேண்டிய அற்புதம் ஒன்று உண்டு என்றால் அது திரு குர்ஆனிலும் ஹதீஸிலும் உள்ள ஆத்மார்த் தங்கள் உலகின் பாதுகாப்புக்கும், மக்கள் நேர்வழி வாழவும் அவசியமானவை என்று காட்டுவதே யாகும்.

## இன்று தேவையான கராமத்

முஃஜிஸாத் என்பது மனிதனுடைய சக்திக்கு எட்டாத விஷயம். அல்லாஹ்வின் நபிமார்களாக முற்காலத்தில் தோன்றியவர்கள் உலகத்தவருக்கு, உலகத்தவரின் சக்திக்கும், ஞானத்துக்கும் எட்டாத காரியங்களைச் செய்து, தாங்கள் உலகைச் சிருஷ்டித்த ஆண்டவனின் தூதர்களென்பதற்கு அவற்றைச் சான்ருகக் காட்டி வந்தார்கள்.

"மக்கள் கிரகிக்கும் சக்தியின் அளவுக்கே அவர்களிடம் பேசுங்கள்" என்று ஒரு ஹதீஸ் உண்டு. ஆகையால், ஒவ்வொரு நபியும் தத்தம் மக்களின் அறிவு எட்டிய அளவுக்குத்தான் பேசினார்கள். அத்துடன் அந்தந்த மக்கள் தங்களின் விசேஷ சக்தியெனக் கருதியவைகளுக்கு ஒருபடி மேலானதை ஆண்டவன் அனுமதி கொண்டும், வழிகாட்டுதல் கொண்டும், சக்தி கொண்டும் அவர்கள் செய்து காட்ட நேர்ந்தது.

யூஸுபு நபி காலத்திய பிர்ஔன் ஆட்சியில் எகிப்திய அறிஞர்கள் ஜோதிட சாஸ்திரத்திலும் கனவுகளின் பலன் சொல்வதிலும் பெருமையடித்துக் கொண்டிருந்தனர். ஏழு ஆண்டுகள் பஞ்சம் பற்றி எவரும் ஜோதிடம் கொண்டோ கனவு கொண்டோ அறிய முடியாதிருந்தனர். அல்லாஹ்வின் அருள் மூலம் கனவுப் பலன் கூறுவது கொண்டு யூஸுபு நபி ஏழு ஆண்டுகளின் பஞ்சத்துடைய முன்னறிவிப்பும் கொடுத்தார்; அதிலிருந்து தப்புவதற்குத் திட்டமும் வகுத்துக் கொடுத்தார். மூஸா நபியின் காலத்தில் மாந்திரீகம் எகிப்தில் தலை விரித்தாடிக் கொண்டிருந்தது. மூஸா (அலை) யின் தடி

எறியப்பட்டபோது அது பெரும் பாம்பாக மாறி, மந்திரவாதிகளின் மந்திர சக்தியின் கண்கட்டு வித்தையால் தோன்றிய சர்ப்பங்களைச் சாப்பிட்டு விட்டபோது, மந்திரவாதிகள் இது மந்திரம் அன்று, தெய்வ அனுமதி கொண்டு நடந்த அற்புதம் என்பதை உணர்ந்து அடிபணிந்தார்கள்.

ஈஸா நபியின் காலத்தில் மந்திரத்தால் நோய்களை நிவர்த்தியாக்குவது தான் பெரும் கையிருப்பாக இருந்து வந்தது. அவர்களுக்கிடையில் அல்லாஹ்வின் நாமம் கொண்டு ஈஸா நபி கை வைத்ததும் குஷ்டங்களும் பறந்தன. உடனே அக் காலத்திய அறிஞர்கள், இது மந்திரம் அன்று, தெய்வ அருள் என்பதை உணர முடிந்தது.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பிறந்த அரபு நாடு, கவிகள் இயற்றுவதைப் பெரும் கையிருப்பாகக் கொண்டிருந்தது. வருடா வருடம் கஅபாவில் கவிப் போட்டி நடந்து வந்தது. திரு குர்ஆன் ஆயத்துகளை எழுதப் படித்திராத நபிகள் நாயகம் தொனித்த போது இது மனிதனுடைய வாக்கு அன்று என்பதை அவர்கள் உணர முடிந்தது. ஆயினும், நமது நபிகள் நாயகம் (ஸல்) அன்றைய அரபிகளுக்கு மட்டும் நபியாக வரவில்லை. கியாம நாள் வரையுள்ள வருங்காலத்துக்கும் நபியாக வந்தார்கள். ஆகையால், ஹிஜ்ரத்துக்குப் பின் பத்து ஆண்டுகளுக்குள் அவர்கள் உண்டாக்கிய உலக மாறுதல், உலகம் ஸயன்ஸின் உச்சத்தை அடைந்துள்ள இக் காலத்திலும் கூட அறிஞர்களுக்குப் பிரமிப்பைக் கொடுக்கக்கூடியதாக இருக்கிறது. எழுதப் படிக்கத் தெரியாதிருந்த, ஆயுத பலமோ எண்ணிக்கை பலமோ, பொருள் பலமோ அற்றிருந்த ஒரு சிறிய சமுதாயம்

நபியின் வழி நடத்துதலில் பத்தே ஆண்டுகளுக்குள் அன்றைய உலக வல்லரசாகிவிட்டது! மேனாடுகளில் உள்ள அறிஞர்கள் இன்றைய உலக நிலையில் முந்திய நபிமார்கள் காட்டிய முஃஜிஸாக்களை--பாம்பு சர்ப்பமாக மாறியதையோ, நோய் நீங்கியதையோ-பெரும் அதிசயங்களாக நினைக்கவில்லை. முந்தின நபிமார்களின் பத்துஆக்கள் (சாபங்கள்) பற்றியும் பெரிதாக நினைக்கவில்லை. ஏனெனில், நபிமார்களின் சாபம் ஏற்பட்டுப் புயல் அடித்து ஓர் ஊர் நாசமானது, ஒரு கிராமத்தில் கல் மழை பொழிந்தது, ஓர் ஊரைப் பூமி விழுங்கிவிட்டது என்றுதான் ஏடுகளில் எழுதப்பட்டிருக்கிறது. இன்று உலகத்தவர் கையில் அணுக்குண்டும் ஹைட்ரோஜன் குண்டும் இருக்கின்றன. ஓர் அணுக் குண்டு ஓர் இடத்தில் விழுந்தால் அந்த இடமும் அங்கு இருக்கக்கூடிய ஒரு லட்சம் மக்களும் ஒரேவினாடியில் காணாதுபோய் விடுவார்கள். ஓர் எலும்புகூட இருக்காது. அணுக் குண்டைவிடப் பொல்லாதது ஹைட்ரோஜன் குண்டு. ஆயினும், அவர்களுக்கு எட்ட முடியாதிருப்பது என்ன? தாங்கள் உண்டாக்கிக் கொண்ட கருவிகளிலிருந்து தங்களையும் உலகையும் காப்பாற்றிக் கொள்வது எப்படி என்பதுதான். உலகில் சரியான அரசியலும் பொருளாதாரமும் எப்படி அமைவது என்பதுதான் தெரியவில்லை. ஆகையாலே நபிகள் நாயகம் (ஸல்) பத்தே ஆண்டுகளில் குரோதங்களையும் பேதங்களையும் ஒழித்து, சரியான பொருளாதாரச் சீரும் பரஸ்பர சகோதரத்துவமும் உண்டாக்கியதை நினைக்கும்போது, இன்றைய அறிஞர்கள் அதை ஓர் அற்புதம் என்று நினைக்கிறார்கள்; மனிதன் செய்ததன்று, தெய்வீக அருள் கொண்டு நடந்தது என்கிறார்கள்.

எனினும், நபி(ஸல்) அனுஷ்டித்து வெற்றிகண்ட தத்துவங்களை எடுத்துக் காட்டக்கூடிய முஸ்லிம்களை இன்று காணோம். அந்தத் தத்துவங்களை அறிந்திருப்பின் இன்றைய முஸ்லிம் உலகம் பிற்போக்கில் இருக்குமா? தாங்களே அறிந்திராததை எப்படிப் பிறருக்குப் போதிக்க முடியும்?

நபிமார்களின் காலம் முடிந்து, ஆலிம்களின் காலம் வந்தது. கடைசி நபி போதனைகளைப் பின்பற்றி அறிஞர்களாகுபவர்களே ஆலிம்கள், 'நபிகளின் வாரிசுதாரர்கள்' என்று ஹதீஸ் உண்டு. இந்த ஹதீஸில் சொல்லப்பட்ட 'ஆலிம்கள்' முஸ்லிம் உலகில் தோன்றிய, தோன்றக்கூடிய அறிஞர்கள் ஆவார்கள்.

முஹ்யித்தீன் அப்துல் காதிறு ஜீலானி போன்ற மஹான்கள் தாம் நபிகளின் வாரிசுதாரர்களும், நபி வர்ணித்த ஆலிம்களும் ஆவார்கள். நபிமார்கள் காட்டிய அத்தாட்சிக்கு முஃஜிஸாத் என்று பெயர். நபியின் வாரிசுகளாகிய ஆலிம்கள் காட்டக்கூடிய அத்தாட்சிகள் 'கராமத்' என்று அழைக்கப்படுகின்றன. இத்தகைய ஆலிம்கள் தத்தம் காலத்துக்குரிய அத்தாட்சிகளையே காட்டி வந்தனர்.

உதாரணமாக, தத்துவ ஞானத்தில் உலகம் தனது உச்சத்தைக் கண்டிருந்த காலத்தில் இமாம் கஸ்ஸாலி (றஹி), முஹ்யித்தீன் இப்னு அரபி (றஹி), இப்னு ருஷ்த் ஆகியவர்கள் அன்றைய தத்துவ ஞானிகளுக்கு எட்டமுடியாதிருந்த தத்துவ ஞானங்களை திரு குர்ஆன், ஹதீஸிலிருந்து எடுத்துக் காட்டினார்கள். ரிஷிகளும் சித்தர்களும் மிகைத்திருந்த காலத்தில் தோன்றிய ஹஜ்ரத் ஷாஹுல் ஹமீது ஆண்டகை அவர்கள் சித்தர்

களின் சித்துகளை மிகைக்கக்கூடிய சித்து திரு குர்ஆன், ஹதீஸ் கொண்டு ஏற்படக்கூடிய தென் பதை நிரூபித்துக் காட்டினர்கள்.

நாம் இருக்கும் காலம் தனிப்பட்டவர்களின் காலமன்று. சமுதாயங்களின் காலம் இது. திரு குர்ஆன், ஹதீஸைத் தாங்கி நிற்கும் சமுதாயம் தன்னிடம் மற்றவர்கள் அடைந்திராத அடையமுடியாத, சரியான வழிகளும் திட்டங்களும் இருக்கின்றன என்பதை நிரூபிக்க வேண்டியதுதான் இன்று உலகுக்கு வேண்டியிருக்கும் காராமத்து. எங்கள் திரு குர்ஆனில் எல்லாம் இருக்கிறது, எங்கள் நபி பத்து ஆண்டுகளில் இன்ன செய்து முடித்தார்கள் என்று கூறிக்கொண்டிருப்பதால் மட்டும் என்ன பயன்? சுதந்திரம் உள்ள முஸ்லிம் சமுதாயங்கள் நபி(ஸல்) திரு குர்ஆன்படி நடந்து பத்து ஆண்டுகளுக்குள் நடத்திக் காட்டியது போல், தாங்களும் திரு குர்ஆனை அறிந்து அதன்படி தங்களைச் சீர்படுத்திக் காட்டவேண்டும். அதைப் பார்த்து மறு சமுதாயங்களும் நபி (ஸல்) வழியைப் பின்பற்ற முன்வரும்.

சுதந்திரம் அடைந்துள்ள பெரும் சமுதாயங்கள் மட்டிலுமன்று, சிறிய சமூகங்கள் பிற ஆட்சியின்கீழ் இருக்கும் நிலையிலும் தீவிர முற்போக்கை அடைந்து பிறருக்கு முன்மாதிரியாவது சாத்தியமான காரியமே.

இக்காலத்துக்கு வேண்டிய கராமத்துகளைச் செய்து காட்டும் முஸ்லிம் சமுதாயங்களும் அதற்குரிய தலைவர்களாகிய உண்மை ஆலிம்களும் உண்டாவார்களென்று எதிர்பார்ப்போமாக!

## நபியின் ஸுன்னத்

உண்மை முஸ்லிம்கள் ஸுன்னத்தும் ஜமாஅத்தும் உள்ளவர்கள் (அஹ்லு-ஸுன்னத்-வல்-ஜமாஅத்). ஸுன்னத் என்றால் நபி (ஸல்) அவர்களின் முன்மாதிரி; ஜமாஅத் என்றால் நபி (ஸல்) உண்டாக்கிக் காட்டிய சமுதாய அமைப்பு. ஸுன்னத்து எனும் முன் மாதிரிப்படி நாம் நடக்கிறோமா, நமது ஜமாஅத்துகள் நபி (ஸல்) அமைத்துக் காட்டிய மதீனத்து ஜமாஅத்தைப் போல் இருக்கின்றனவா என்பது பற்றிச் சிந்திக்க வேண்டும்.

நபிகள் நாயகம் (ஸல்) உலகில் எங்ஙனம் ஜீவியத்தை நடத்தினார்கள், எங்ஙனம் தன் சொந்த விஷயங்களை நடத்தினார்கள், எப்படி மற்றவர்களுடன் பழகினார்கள், எப்படிப் பிறருக்குச் சேவை செய்தார்கள், எவ்வாறு இறைவனை வணங்கினார்கள் என்பனவற்றை அறிந்து அதன்படி நாமும் செய்வதுதான் ஸுன்னத்.

பேரீச்சம் பழத்தை அவர்கள் தின்றதுண்டு. ஏனெனில், அக் கனி அரபு நாட்டில் உண்டு. ஆகையால், பேரீச்சம் பழம் தின்னுவது ஸுன்னத் என்பார்கள். ஆயினும், பிறர் பசித்திருக்கத் தான் உணவு அருந்த முடியாத காரணத்தினால், இருந்தவற்றை தானம் செய்துவிட்டு, மூன்று நாட்கள் வெறும் தண்ணீருடன் அவர்கள் இருந்தார்களே அது ஸுன்னத் இல்லையா? அதே பரோபகாரச் சிந்தனையையும் நாம் உண்டாக்க வேண்டாமா? வடக்கில் தலை வைத்துத் தெற்கில் கால் நீட்டித் தூங்கினார்கள்; அங்ஙனம் நாமும் தூங்குவது ஸுன்னத் என்பார்கள். அதே நபிகள் நாயகம் (ஸல்) இரவில் சில மணி நேரம் வணக்கத்திலும் தியானத்திலும் செல

வழித்து வந்தார்களே அது ஸுன்னத் அல்லவா? வடக்கில் தலை வைத்துத் தூங்கிவிட்டால் போதுமா? சில மணி நேரம் இல்லாவிடினும் அரை மணி நேரமாவது தஹஜ்ஜத் நேரத்தில் நாம் சில நிமிடங்கள் எழுந்து தொழுதுவிட்டுச் சில நிமிடங்கள் தியானிக்க வேண்டாமா? நபி (ஸல்) சரிதை நூல்களைப் படியுங்கள். அவர்கள் நமக்கு முன்மாதிரியாகச் செய்து காட்டியவைகளை உணருங்கள்; ஸுன்னத்தின்படி வாழுபவர்களாகுங்கள். முஹம்மதின் பார்வை, முஹம்மதின் செவி, முஹம்மதின் குணம், முஹம்மதின் ஆத்மா, முஹம்மதின் நடை பாவனை, முஹம்மதின் செயல் இவைகளை ஒவ்வொரு முஸ்லிமும் அடைய வேண்டும். ஒவ்வொரு முஸ்லிமும் ஒரு சின்னஞ் சிறிய முஹம்மதாக வேண்டும். இதுதான் ஸுன்னத். மாக்களாக இருக்க நீங்கள் பிறக்கவில்லை; ஒரு சிறிய முஹம்மது ஆவது உங்கள் பிறப்புரிமை. இதுதான் ஸுன்னத்.

மதீனா ஜமாஅத்தின் முன்மாதிரி என்ன? ஓர் உபமானத்தைக் கூறுவோம். அல்லாஹ்வை முன்னிட்டு ஜக்காத்தை அனைவரும் கொடுத்தனர். ஜக்காத் நிருவாகத்துக்கு ஒரு கமிட்டி நியமிக்கப்பட்டிருந்தது. ஜமாஅத்தில் இருந்த அனைவருடைய பெயர்களடங்கிய பட்டியல் அவர்களிடம் இருந்தது. அந்த ஜமாஅத்தின் தலைமைப் பீடமாக மஸ்ஜிதுன் நபவீ இருந்தது. ஒவ்வொரு முஸ்லிமும் வருட முடிவில் தம்மிடம் உள்ள மொத்த ஐவேஜில் நாற்பதில் ஒரு பங்கைக் கொடுத்தார். நஷ்டப்பட்டவர்கள், முறிந்தவர்கள், துரதிருஷ்டசாலிகள், கை கால் போனதால் வேலை செய்ய முடியாதிருந்தவர்கள், விதவைகள், அனா

தைகள் முதலியவர்களின் பெயர்களடங்கிய பட்டியலும் இருந்தது. முஸ்லிம்கள் பிச்சை கேட்கக் கூடாது என்பது நபி (ஸல்) உத்தரவு. நாட்டாண்மைக்காரர்கள் தாமே சகலவற்றையும் விசாரித்து ஜக்காத்தைப் பங்கீடு செய்தார்கள். முதலில் அனுதைகள், விதவைகள், இயலாதவர்களுக்கு ஒரு வருட உணவுக்குரிய பொருள் கொடுக்கப்பட்டது. அதற்கு மேல் மிச்சம் இருந்த தொகையை நஷ்டப்பட்டவர்களுக்கும் வர்த்தகத்தில் முறிந்தவர்களுக்கும் புதிய பிழைப்பு உண்டாக்கிக் கொள்வதற்கு உதவி செய்வதில் செலவிட்டப்பட்டது; வழிப்போக்கர்கள் வந்தால் அவர்களுக்குரிய வசதிகள் செய்யப்பட்டது. மதீனுவில் பெயரிலும் லேபலிலும் மட்டும் முஸ்லிம்களாக யாரும் இருக்கவில்லை. மதீனு சமுதாயத்தில் சில ஆண்டுகளில் பொருளாதாரக் குறைகள் மறைந்தன. ஆரம்ப வருடங்களில் வெறும் ஜக்காத்துடன் தேவையுள்ளவர்களின் தேவைகள் பூர்த்தியாகாதிருந்த காலத்து நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் காட்டிய முன்மாதிரிப்படி ஸஹாபாக்கள் வெறும் ஜக்காத்துடன் நிற்காது மேலும் அதிகமான தியாகங்களைச் செய்தார்கள். நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இருந்ததையெல்லாம் காலிசெய்து சில சமயங்களில் மூன்றுநாள் பட்டினிகிடந்தது ஆரம்ப ஆண்டுகளிலேயே. ரஸூல் (ஸல்) இங்ஙனம் செய்ததைக் கண்ட ஸஹாபாக்களும் அங்ஙனமே செய்தார்கள். ஜமாஅத்தில் பசியுடன் எவரும் இருக்க, தாம் சாப்பிடக்கூடாது என்பதை உணர்ந்தார்கள். இச்சகோதரத்துவ உணர்ச்சி வலுத்து, ஆண்டவனின் விசேஷ பரக்கத் மாரிகள் பொழிந்து மதீனு சமுதாயம் செழிப்பும் ஷுக்ரும் உள்ள சமுதாயமாக மாறியது.

நபி(ஸல்) அவர்களின் சரிதையைப் படியுங்கள். உங்களுக்கு அது முன்மாதிரி என்பதை உணருங்கள். அவர்கள் பட்ட கஷ்டங்களையும் அவற்றைச் சகித்ததையும் இறுதியில் வெற்றி கண்டதையும் சிந்தித்துப் பாருங்கள். ஸுன்னத்தையும் ஜமாஅத்தையும் உணர்ந்து அவ்விரண்டும் உள்ள முஸ்லிம்களாக ஆவதற்கு வைராக்கியம் கொள்ளுங்கள்.

## ஸுன்னத்தும் ஜமாஅத்தும்

அல்லாஹ் நிர்ணயித்துள்ள காலச் சக்கரம் - அவன் உண்டாக்கியுள்ள இயற்கையின் சட்டம்-மகா அற்புதமானது. அதற்கு சிருஷ்டிகள் இணங்கி நடந்து தீரவேண்டும்.

நடப்பதற்குப் பூமியைப் படைத்தான்; மிதப்பதற்குத் தண்ணீரை உண்டாக்கினான். பறப்பதற்கு ஆகாயத்தைச் சிருஷ்டித்தான். ஆகாயத்தில் நடப்பேன், தரைமீது இருந்து கொண்டு மிதப்பேன் என்றால் முடியாத காரியம். சட தத்துவப் பொருட்களில் ஒரு மின்சாரத்தை மறைத்து வைத்திருந்தான்; அதை வெளியாக்குவதற்கான யந்திரங்களைக்கண்டு பிடிப்பதற்கு மூளையைக் கொடுத்தான். கண்டுபிடித்த திட்டத்தின்படி யந்திரங்களைச் செய்வதற்குரிய பொருட்களையும் உண்டாக்கிக் கொடுத்தான். அறிவை உபயோகித்து அதற்குரிய யந்திரங்களைச் செய்து மின்சார ஜோதி கொண்டு எளிதில் வெளிச்சத்தை அடைந்து கொள்வது முறையேயன்றி, "ஆண்டவனே, வெளிச்சத்தைக் கொடு!" என்று தஸ்பீஹ் மணியை ஓயாது ஆயுள் முழுவதும் உருட்டிக் கொண்டிருப்பது முறையன்று. ஒவ்வொரு காரியத்துக்கும் ஒவ்வொரு

வழி இருக்கிறது; ஒவ்வொரு காரியத்துக்குரிய யந்திரமும் இருக்கிறது; மந்திரமும் இருக்கிறது. மந்திரம் என்றால் 'சூ மந்திரக்காளி' என்பது போல் அன்று. 'மன்' எனும் சமஸ்கிருத பதம்தான் தமிழில்'மனம்'ஆகியது;'ஜெய்' எனும் சமஸ்கிருதம் தமிழில்'ஜெயம்' ஆனது போல், 'மன்' என்பதன் திறம் மனத்திறம் தான், மந்திரம் என்பது.

அல்லாஹு அக்பர்! சட தத்துவப் பொருட்களில் மின்சாரத்தை வைத்துக் கொடுத்த அல்லாஹ், மனத்திலும் ஒரு மின்சாரத்தை மறைத்துக் கொடுத்துத்தான் இருக்கிறான். அந்த மானஸ மின்சாரத்தைத் திரட்டி அது கொண்டு பிறரின் கண்களைக் கட்டுவதும் உண்டு. சட தத்துவத்தில் உள்ள மின்சாரத்தை வெளிப் படுத்துவதற்கு ஸயன்ஸ் தெரிய வேண்டும். மானஸ மின்சாரத்தை வெளியாக்குவதற்குள்ள மானஸ சாஸ்திரமும் உண்டு. சடதத்துவ மின்சாரத்தைவிட, மானஸ மின்சாரத்தைவிட அதியற்புதமான சுடர் உள்ள ஒரு மின்சாரத்தை, மானிடன் உண்மையிலேயே மானிடனானால், அவனுக்குக் கொடுப்பதாக அல்லாஹ் கூறியுள்ளான். அந்த விசேஷச் சுடர் பெறுவதற்குரிய வழிகளைத்தான் நபிமார்கள் மூலம் புகட்டினான். எப்படிச் சடதத்துவ மின்சாரம் பற்றிய சட்டதிட்டம் உண்டோ, எப்படி மானஸ சாஸ்திரம் பற்றிய வழிகள் இருக்கின்றனவோ, அப்படியே அல்லாஹ் தனது ஹபீப் ஆகிய முஹம்மது (ஸல்) அவர்களின் ஆத்மா வழியாக முஸ்லிம்களுக்குக் கொடுப்பதாக வாக்களித்துள்ள ஆத்ம சக்தி எனும் மின்சாரத்துக்கும் அவன் விதித்துள்ள சட்ட திட்டங்கள் உண்டு.

சடதத்துவ மின்சாரத்தை எடுத்துக் கொள்ளுங்கள். எலக்டிரிக் விளக்கு எரிகிறதே அந்தப் பல்புக்குள் காற்றுக் கிடையாது. பல்புக்குள் காற்று இல்லாதிருந்தால்தான் கம்பியிலிருந்து பல்புக்குள் உள்ள திரியில் ஓடிவரும் மின்சாரம் சுடராகி வெளிச்சம் கொடுக்கும். பல்புக்குள் காற்று புகுந்துவிட்டால் வெளிச்சம் கொடுக்காது. வெளிச்சம் வேண்டுமென்றால் உள்ளே காலியாக உள்ள பல்பை உபயோகிக்கவேண்டும். "மின்சார தேவியே, வந்து காட்சி அளிப்பாயாக!" என்று கும்பிட்டுப் பூஜை பண்ணினாலும் வெளிச்சம் உண்டாகாது. "மின்சார தேவியைச் சிருஷ்டித்த நாயனே, பத்துப் பேருக்குச் சோறு போடுகிறேன், உன்னை ஆயிரம் தடவை புகழுகிறேன், இந்த மின்சார பல்புள் சுடர் உண்டாகட்டும்" என்று அரபியில் அல்லது சம்ஸ்கிருதத்தில் அல்லது தமிழ் செய்யுளாகச் சொல்லிக் கொண்டிருந்தாலும் அந்த விளக்கு வெளிச்சம் கொடுக்கப் போவதில்லை. இந்த மாதிரிச் செய்தால் மலக்குகள் என்ன சொல்வார்கள்? 'மடையர்கள்! ஆண்டவன் உண்டாக்கிக் கொடுத்திருப்பதை அவன் கொடுத்த மதிகொண்டு எடுத்துப் பயனடையாமல் உளறுகிறார்கள்' என்றுதான் கூறுவார்கள். இதுபோலவே, கலிமா தய்யிபாவில் லா இலாஹ இல்லல்லாஹு என்றால், அல்லாஹ்வின் சுடர் மட்டும் வருவதற்கு அவன் தவிர மற்ற நினைவுகள் இல்லாத பல்புகளாக மனம் இருக்க வேண்டுமென்பதுதான். எப்படி பல்புக்குள் மின்சாரம் வந்ததும் உள்ளே பல்பு காலியாக இல்லாவிடில் சுடர் தெரியாதோ அங்ஙனமே அல்லாஹ்வின் அருள், பரக்கத், ரஹ்மத் எனும் மின்சாரங்கள் ஆத்மாவில் படும்போது, ஆத்மாவெனும்

பல்புகளில் வேறு 'இலாஹ்'களின் ஞாபகம் எனும் காற்று இருந்தால் அந்த அருள் சுடராகி வெளிச்சம் கொடுப்பதில்லை. அல்லாஹ் (அல்லாஹ் அருளக்கூடிய ஆத்ம மின்சார சக்தி, சுடர் ஆக வேண்டுமாயின்), இல்லல்லாஹு (அவனுடைய ஞாபகம் தவிர) லா இலாஹ (வேறு எப்பொருளுடைய ஞாபகமும் இல்லாதிருக்க வேண்டும்). தொழுகை அத்தகைய "லாயிலாஹ இல்லல்லாஹு" எனும் கலிமா நிலையில் இல்லாதிருப்பின், தொழுகையில் ஏற்படக்கூடிய அருளின் மின்சாரம் பட்டும் படாத நிலைதான். அருள் வந்தும் சுடர் உண்டாகாத இருளாகவே இருந்து விடுகிறது.

அல்ஹம்து லில்லாஹி! அல்லாஹ்வின் ரஹ்மத் பரக்கத் என்ற அருள் என்றால் இலேசானதா? சடதத்துவ மின்சாரங்களையும் மானஸ மின்சாரங்களையும் மிகைக்கக்கூடிய சக்தி அது. கிரஹதோஷம், சகல தோஷங்களையும் பறக்க வைக்கக்கூடியது அது. லௌஹுல் மஹ்பூளில் உள்ள 'எழுத்துக்களையே மாற்றி அமைத்துவிடக் கூடியது அது. ஆயினும், அந்தச் சுடரின் வெளிச்சம் கொண்டு பயன் பெறுமலும், அதை அடையக்கூட முயற்சியாமலும் இருந்து வருகிறோம். இப்போது வெளியாகியுள்ள "சந்நிதானம்" அல்லது "மூமினின் மிஃரா"ஜில், இது பற்றிய பல விளக்கங்கள் உங்கள் முன் சமர்ப்பிக்கப் பட்டுள்ளன.

தனிப்பட்ட ஜீவியத்துக்குரிய ரஹ்மத், பரக்கத், ஈமான், (பாதுகாப்பு) என்ற ஒரு மின்சாரமும் உண்டு. 'ஜமாஅத்' எனும் சமுதாயத்துக்குரிய ரஹ்மத், பரக்கத், ஈமானுக்குள்ள மின்சாரமும்

உண்டு. தனிப்பட்ட ஜீவிய மின்சாரம் என்பது துளியாயின் ஜமாஅத்துக்கென்று உள்ள சமுதாய மின்சாரம் என்பது சமுத்திரமாகும். அந்த மின் சாரத்தை கிரகிப்பதற்குரிய நிபந்தனையையும் ஆண்டவன் உண்டாக்கியுள்ளான். சமுதாய ரீதி யான அருள், ரஹ்மத், பரக்கத், ஈமான் (பாதுகாப்பு) அடைவதென்றால், அதற்கென இறைவன் விடுத் துள்ள சட்டத்துக்கு நபிமார்களும் கட்டுப்பட்டுத் தீரவேண்டியதிருந்தது. விருட்சம் உண்டாவதற்கு ஆண்டவன் விதித்த சட்டம் என்ற வித்தைப் போட்டு இத்தனை காலத்துக்குள் அவ்விருட்சம் வளருமென்பது. வித்தைப் போடாமல் 'உண்டாகு மரமே!' என்று விருட்சத்தை உண்டாக்க முடியுமா? சமுதாய அருள் எனும் சமுத்திர வெள்ளப் பிரவா கம் போன்ற ஆத்ம சக்தி உண்டாவதற்கு இறை வன் விதித்த இரு நிபந்தனைகளைக் கூறுவோம்: ஒரு திட்டத்தில் நாற்பது பேர் சிரத்தை எடுத்து முயற் சிக்காதவரை, ஜமாஅத்துக்குரிய அருள் என்பதே ஏற்படுவதில்லை. கொள்கை ஸ்திரம் உள்ள நாற்பது பேர்கள் இருந்தால் சமுதாயம் எனும் வித்தாகிறது. எம்பெருமான் (ஸல்) அவர் கள் ஹிரா குகையில் லைலத்துல் கதர் அன்று அவர் களுக்குரிய சர்வ அருள்களும் இறங்கியிருந்த தென்றாலும், தனிப்பட்ட முறையிலேயே பிரச் சாரங்களை நடத்திக்கொண்டிருந்தார்கள். முதலில் முஸ்லிம்களான சிலர் ஒரு ஸஹாபியின் வீட்டில் தான் தொழுதுகொண்டிருந்தார்கள். நாற்பதாவது முஸ்லிமாக ஹஜ்ரத் உமர் பாரூக் (றலி) முஸ்லிமானதும், பகிரங்கமாக, தனிச் சமு தாயமாகப் பகிரங்கத் தொழுகையும் பிரச்சாரமும் ஆரம்பிக்கப்பட்டன. நாற்பது என்ற எண்ணிக்கை

யின் சட்டம் பூர்த்தியாவதற்குச் சில ஆண்டு காலம் தேவைப்படவே செய்தது.

ஒரே கொள்கையும், திட்டமும், அத் திட்டத்தில் சிரத்தையும் உள்ள நாற்பது பேர் சேர்ந்து விடின், பிரச்சார சக்தியுடன் இயங்கக்கூடிய 'சமுதாயம்'(ஜமாஅத்) உண்டாகி விடுகிறது. இதுபோலவே, வெற்றியெனும் பரக்கத் ஒரு சமுதாயத்துக்கு ஏற்படுவதென்றால் குறைந்தது முந்நூற்றிப் பதின் மூன்று பேர்கள் அச்சமுதாய லட்சியத்துக்குரிய தியாகத்துக்குத் தயாராக வேண்டுமென்ற சட்டத்தையும் பூர்த்தி செய்யவேண்டியிருந்தது. ஹிராகுகையில் உத்தரவு ஏற்பட்டதிலிருந்து பதினான்காவது ஆண்டில் 313 தியாகிகள்கொண்ட சமுதாயமாக முஸ்லிம் சமுதாயம் ஆனபோது, அன்றைய உலகையே புரட்டிவிடும் சக்தி உண்டாகி விட்டது. வெறும் எண்ணிக்கையில் ஒன்றுமில்லை. அல்லாஹ்வுடைய அருளைக் கிரகிக்கக் கூடிய முஸ்லிம்கள் சம்பந்தப்பட்டவரை அவர்களுள் முந்நூற்றிப் பதின் மூன்று பேர்கள் ஒருமனப் பட்டவர்களாகி ஒரு கூட்டாக, ஜமாஅத்தாக அமைந்தால், ஏற்படும் ஆத்ம சக்தி எனும் மின்சாரம், அல்லாஹ்வை அறியாத முப்பத்தி ஒரு கோடி முப்பது லட்சம் பேர்கள் திரண்டு கொண்டாலும் உண்டாகாத விஷயம்.

## அவர்கள் வெற்றியின் ரகசியம்

இன்றும் உலக சரித்திராசிரியர்களைப் பிரமிக்க வைப்பதாக இருப்பது பத்ரு வெற்றியாகும். ரமலான் பிறை பதினேழில்) 313-பேர் உலகின் எந்தச் சக்தியையும் மிகைக்கக் கூடிய ஆத்ம சக்தியை அடைந்தனர்.

மக்காவிலிருந்து ஹிஜ்ரத் செய்து வந்திருந்தவர்கள் - தங்களின் சொத்துக்களைப் போட்டுவிட்டு வெறுங் கையுடன் வந்திருந்தவர்கள்- எழுபத்து மூன்று பேர்கள். மதீனாவிலிருந்தவர்கள் இருநூற்றி நாற்பது பேர்கள். இந்த முந்நூற்றிப்பதின் மூன்று பேர்களுக்கும் யுத்தப் பயிற்சி கிடையாது; அவர்களிடம் போதிய ஆயுத பலமும் இருந்ததில்லை.

அன்றைய அரபி நாட்டின் தலைநகராக இருந்தது மக்கா. தலை நகரிலிருந்து கவச உடைகளும், ஈட்டிகளும், கேடயங்களும், அம்புகளும் தாங்கியிருந்த ஆயிரத்துக்கதிகமானவர்களின் ராணுவம் மதீனாவில் அடைக்கலம் பெற்றிருந்த சிறிய ஒரு சமுதாயத்தைக் கருவறுக்கும் நோக்குடன் திரண்டு வந்தது. எண்ணிக்கையில் மதீனாவின்பலம் மக்காவின் பலத்தில் மூன்றில் ஒரு பங்குதான். ஆனால், ஆயுத பலத்திலோ சுத்த சூன்யமாகவே இருந்தது. ஐந்து பேருக்கு மட்டும் கவச உடைகளும் வாளும் கேடயமும் இருந்தன. இதுதவிர ஏழு ஈட்டிகளும் இருந்தன. ஆயுத பலம் சம்பந்தப்பட்டவரை மதீனா சமுதாயத்தைவிட மக்காவிலிருந்து திரண்டுவந்த ராணுவம் இருநூறு மடங்கு அதிகமாக விருந்தது. எனினும், ரமலான் பிறை பதினேழு காலையில் ஆரம்பித்த போரில் மதீனா சமுதாயம் தான் வெற்றியடைந்தது! அந்த வெற்றியின் காரணமாக இருந்தது அவர்கள் அடைந்திருந்த ஆத்ம சக்திதான்.

மதீனாவில் பத்ரு மைதானத்தில் அல்லாஹ்வின் 'பத்தாஹ்' (வெற்றிவரம் அளிப்பவன்) என்ற இஸ்மின்-குணத்தின்-ஒரு சுடர் பட்டது. பல்பில் காற்று இல்லாத காலி நிலை இல்லாதிருப்பின் மின்சாரம்

ஓடியும் சுடர் கொளுத்தப்படாது தான் இருக்கிறது. அதுபோலவே 313 தியாகிகளான முஸ்லிம்கள் இல்லாதிருந்திருப்பின் பத்தாஹ் எனும் இஸ்மின் மின்சாரம் பட்டும் சுடர் கொளுத்தப்படாது இருந்திருக்கும். அதற்கு முன் வரையில் 313 பூர்த்தியாகாத நிலையில்தான் நபி உண்டாக்கிய சமுதாயம் கடும் சோதனைகள் எனும் புயல்களில் அடிபட்டுக் கொண்டிருந்தது. பத்ரு தினத்தில் உண்மையில் விசுவாசமும் அதற்குத் தியாகம் செய்யும் மனமும் கொண்டிருந்தவர்களின் எண்ணிக்கை 313 ஆகிவிட்டதால் 'பத்தாஹ்' என்ற இஸ்ம் கொண்டு ஏற்பட்ட மின்சாரம் இருளை விரட்டி அடிக்கும் சுடராகிவிட்டது.

இந்த 313 பேர் உண்டானதில் பங்கு பெற, புனித பூமியில் பிறந்திருந்த மக்கா வாசிகளில் 73 பேருக்குத்தான் கொடுத்து வைத்திருந்தது. யதுரபிலிருந்த 240 பேர்களுக்கும் நஸீபு இருந்தது; ஆகையால் யதுரபுதான் மதீனத்துன் - நபி (நபியின் நகரம்) ஆயிற்று.

பத்ரு மைதானத்தில் முதலாவதாக வெளியான ஆத்ம சக்தி நாளடைவில் அதிகமாகி இறுதியில் இரத்தம் சிந்தாமல் மக்காவை ஜெயித்த பெரும் வெற்றியுடன் தனது உச்சத்தை அடைந்தது.

எந்த ஆத்ம சக்தியைப் பத்ரு மைதானத்தில் நபி (ஸல்) சகிதம் நின்ற ஸஹாபாக்கள் அன்று அடைந்தார்களோ, அந்த ஆத்ம சக்தியை இன்றும் உண்மை முஸ்லிம்கள் அடைய முடியும். அதை என்று அடைவார்களோ அன்றுதான், இந்தப் பிரளய சகாப்தத்தில்-சாத்தானின் தீய சக்திகள்

தலை விரித்தாட முயன்றுள்ள காலத்தில்-முஸ்லிம் உலகம் தலை தூக்க முடியும்.

எனவே, எந்த மனம், குணம், ஆத்மா உள்ளவர்களாக பத்ரு மைதானத்தில் இருந்த முந்நூற்றிப் பதின் மூன்று முஸ்லிம்களும் இருந்தார்களோ அந்த மனம், குணம், ஆத்மா உள்ளவர்களாக ஆக வேண்டுமென்ற தீர்மானத்தை முஸ்லிம்கள் செய்ய வேண்டிய காலம் இது.

மக்காவிலிருந்து வந்திருந்த எழுபத்து மூன்று பேர்களும் அல்லாஹ் ரஸூலை முன்னிட்டுக் கடும் அடக்குமுறைகளைச் சகித்திருந்து, இறுதியில் சகலத்தையும் துறந்துவிட்டு வெளியேறியவர்கள். மதீனாவிலிருந்தவர்கள் அடைக்கலம் புகுந்தவர்களுக்கு உதவி செய்வதற்காக இருந்தவற்றில் சரி பாதியைத் தூக்கிக் கொடுத்தவர்கள்; ரஸூலின் போதனையை ஏற்று, சத்தியத்துக்காகத் தம் உயிர்களைத் துரும்பென மதித்து, தேவைப்படின் பலி கொடுப்பதற்குத் தயாராகிப் பத்ரு மைதானத்துக்கு வந்தவர்கள். அல்லாஹ் தனது தூதரின் மூலம் கொடுதத தீனை முன்னிட்டுச் சகலவற்றையும் துறப்பதற்கு அவர்கள் தயாரானபோதுதான், அவர்கள் சோதனையில் தேறிவிட்டபடியால், உதவிக்கு ஆத்மீகச் சுடரை அல்லாஹ் கொடுத்தருளினான்.

காலம் விஷம் நிறைந்த காலம். அடிக்கும் காற்றுகளும் விஷம் நிறைந்தவை. இக்காலத்தில் பத்ரு ஸஹாபாக்களுக்குத் தீன் விஷயத்தில் இருந்த பற்றுதலும், அவர்கள் செய்வதற்குத் தயாரான தியாகமும் இல்லாவிடினும் தீன் விஷயத்தில் சொற்ப சிரத்தையும் சொற்ப தியாகமும் இருப்பினு

கூட, அன்று ஏற்பட்ட ஆத்ம சக்தியும் ஆத்மீகச் சுடரும் இன்று உண்டாகக்கூடியவை என்பதை உணருவீர்களாக! பத்ரு யுத்தத்தின் முன், முஸ்லிம் சமுதாயத்துக்கு எத்துணை பெரிய ஆபத்து இருந்ததோ அதைவிடப் பெரிய ஆபத்து திரண்டு கொண்டிருக்கும் காலம் என்பதையும் உணருவீர்களாக! உலக ஜோலிகளில் ஈடுபடுங்கள்; எனினும், சிறிது தீனுடைய ஞாபகம், சிறிது தீனுடைய சேவை, சிறிது தீனுக்காகத் தியாகம் இருக்கட்டும்! அதனால் உங்களுக்குத்தான் நன்மை இருக்கிறது.

## நபி காட்டிய வழி

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நடத்திக் காட்டிய வழி, உண்மையில், அல்லாஹ்வே நமூனவாக, நபியைக் கருவியாகக் கொண்டு நடத்திக் காட்டிய வழியாகும். இந்தக் கருத்தே,

**வ-மா-ரமைத்த-இத்-ரமைத்த-வலாகின்னல்லாஹ-ரமா**

(எறிந்த சமயத்தில் நீர் எறியவில்லை. நீர் அல்லாஹ்வின் கருவியாக இருந்து எறிந்த காரணத்தினால், எறிந்தது அல்லாஹ்வேயாகும்.)

எனும் ஆயத்தில் கூறப்பட்டிருக்கிறது. ‘இக்ரா’ என்ற சொல்லுடன், ஹிரா குகையில், லைலத்துல் கதர் இரவில், அல்லாஹ்வின் வழிகாட்டுதல் ஆரம்பித்து இருபத்து மூன்று ஆண்டுகள் வரை நடந்தது. அல்லாஹ்வின் மொழியை நபிகள் நாயகம் (ஸல்) செவியுற்று ஜோதி பெற்றார்கள்; அவர்களிடமிருந்து அன்றைய முஸ்லிம் சமூகம் செவியுற்று ஜோதி பெற்றது. இருள் நீங்கி அருள் சுரந்தது; அஞ்ஞானம் நீங்கி மெஞ்ஞானம் பிறந்தது.

ஓர் ஏட்டைக் கொடுப்பது அல்லாஹ்வின் நாட்டமாக இருந்திருப்பின், அவன் விரும்பியிருப்பின், பட்டால் செய்த ஏடுகளில் பொன்னால் எழுத்துக்கள் பொறித்து, தங்கத்தால் பைண்டு செய்து, அந்தப் பைண்டில் நவரத்தினங்களைப் பதித்து வைத்து, ஜிப்ராயீலிடம் கொடுத்து, ஹிராவின் குகையில் இருந்த நபியிடம் அந்த அழகிய கிரந்தத்தைக் கொடுக்கச் செய்திருக்க முடியுமல்லவா! அவனுக்கு முடியாதது எதுவும் உண்டா? 'குன்' என்ற சொல்லுடன் லட்சக் கணக்கான பிரதிகளை உண்டாக்கி நபியிடம் கொடுத்து, ஹிராவிலிருந்து வெளியேறிய நபி, தன்னைக் காணுபவர்களிடம் இதோ அற்புதமாக ஆண்டவன் உண்டாக்கிக் கொடுத்த நூல்கள் என்று விநியோகம் செய்திருக்கலாமல்லவா? இன்று கடிகாரத்தில் இருட்டில் தெரிகிற இரிடியம் பூசுகின்றனரே; இதுவும் சிருஷ்டியில் மறைந்திருந்த கையிருப்புத்தானே! சிருஷ்டித்த ஆண்டவன் நாடி இருப்பின், அன்றே, இருட்டிலும் ஜோதியுடன் தெரியக்கூடிய எழுத்துக்களுடன் திரு குர்ஆனை உண்டாக்கிக் கொடுத்திருக்கலாமல்லவா? இவ்வாறெல்லாம் ஏன் செய்யவில்லை என்று நீங்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டும். ஆண்டவன், ஓர் ஏட்டை, அழகு பார்ப்பதற்காக, அதிசயப் பொருள் என்று கூறிக் கொண்டிருப்பதற்காகக் கொடுக்க விரும்பினனில்லை. உண்மைகளை முதலில் நபியும், பிறகு அவர்களைக் கொண்டு மற்றவர்களும் உணர வேண்டுமென்று விரும்பினன். கருத்துக்களை முதலில் நபியும், பிறகு அவர்களுக்குச் சமீபத்தில் இருந்தவர்களும் பிறகு அவர்களைக் கொண்டு தூரத்தில் இருப்பவர்களும் உணர வேண்டும் என்று விரும்பினன். ஆகையால், ஒவ்வொரு கருத்தை

நன்கு உணரக்கூடிய சமய சந்தர்ப்பச் சூழ்நிலைகளில் புகட்டுவதற்குரிய ஆயத்துகளை அதற்கேற்ற சமய சந்தர்ப்பங்களில் வெளியாக்கிக் கொடுத்தான்.

ஒவ்வொரு ஆயத்து வெளியானதும், அதன் கருத்துக்களை நபிகள் நாயகம் தன்கூட இருந்தவர்களுக்குக் கொடுத்தார்கள். அவர்கள் மற்றவர்களுக்குக் கொடுத்தார்கள். நாளுக்கு நாள் மதீனு சமுதாயத்தின் மறை ஞானம் இவ்விதம் வளர்ந்து கொண்டு போயிற்று.

வேண்டிய சகலத்தையும் ஆண்டவன் கொடுத்து விட்டான். திரு குர்ஆனின் ஒவ்வொரு ஆயத்தும் நபி நாயகம் (ஸல்) அவர்களின் ஜீவியத்தில் ஒரு குறிப்பிட்ட சந்தர்ப்பத்தில் வெளியானது. உபமானமாகக் கூறுவதென்றால், நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஜீவிய அனுபவங்கள் 6666-ல் 6666 கருத்துக்கள் கொண்ட ஆயத்துகள் இறக்கப்பட்டன. நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஜீவிய அனுபவம் (ஸுன்னத்து) எனும் சங்கிலிக் கோவையில், ஒவ்வொரு வளையத்திலும் பதிக்கப்பட்ட ஒரு முத்தாக திரு குர்ஆனின் ஒவ்வொரு ஆயத்தும் இருக்கிறது.

நபிகள் நாயகம் (ஸல்) மதீனுவில் தாங்களே தொழுவித்தார்கள்; வெள்ளிக் கிழமை தோறும் குத்பா பிரசங்கம். செய்தார்கள்; தாங்களே தினசரி காலையில் பள்ளியில் உபதேசம் அளித்து வந்தார்கள். தனது சமுதாயத்தினருக்கு எந்தெந்தக் கருத்துக்கள் திரு குர்ஆனிலிருந்து அன்று ஞாபகப்படுத்த வேண்டுமென்று அவர்கள் மனத்தில் பட்டதோ அந்தக் கருத்துக்கள் உள்ள ஆயத்துகளைத் தொழுகையில் ஓதினார்கள். எந்தெந்தப் போதனைகள் அன்று அவசியமோ அவற்றை தினசரி

காலை உபதேசத்தில் கொடுத்தார்கள். எந்தெந்த ஆயத்துக்களையும் அவற்றின் எந்தெந்தக் கருத்துக்களையும் அந்த வாரத்தில் முக்கியமாக கொடுக்க வேண்டுமோ அவற்றை அந்த வெள்ளிக்கிழமை மிம்பர் மேடையிலிருந்து கொடுத்தார்கள். இந்த முன்மாதிரியைத் தன் சமூகத்தில் இமாம்களாகிறவர்கள், பின்பற்ற வேண்டுமென்பதே அவர்களுடைய அபிலாஷையாக இருந்தது. மதீனு சமுதாயம் உலகில் நிகரிலா மாறுதலை அடைந்தது. அதன் காரணம் என்ன? மதீனத்து முஸ்லிம்கள் அனைவரும் உழைப்பாளிகளாகவே இருந்தார்கள். என்றாலும், தினசரி காலை திரு குர்ஆனிலிருந்து சிறந்த கருத்துக்கள் புகட்டப்பட்டன; பஜ்ரிலும், மஃரிபிலும், இஷாவிலும் அன்றையச் சிந்தனைக்கு உரித்தான ஆயத்துகளை, அவற்றை முற்றிலும் உணர்ந்த நபி (ஸல்) ஓதுவதை, செவியில் கேட்டு சிந்திப்பவர்களாக இருந்தார்கள். பஜ்ரில் நீண்ட நேரம் கிராஅத்து; இஷாவில் அதைவிடச் சொற்பம். வெள்ளிக் கிழமைதோறும் மிம்பர் மேடையிலிருந்து விளக்கம் நிறைந்த மஹோபந்நியாசம். சர்வகலாசாலைக்குச் சென்றால் அறிவு நூல் உள்ள பாஷை ஞானம்பெற பத்து ஆண்டு முதலில் வேண்டும்; அதன்பின் கலாசாலை அறிஞர்களின் பேச்சை அறிய முடியலாம். நபிகள் நாயகம் (ஸல்) கலாசாலைகளை உண்டாக்கவில்லை. வருடக் கணக்கில் எந்த ஸஹாபியும் மத்ரஸாவுக்கோ கலாசாலைக்கோ செல்லவில்லை. தினசரி உலகத் தொல்லைகளுடன் உலகக் கடமைகளுடன், பஜ்ரு, மஃரிபு, இஷாவில் செவியில் வாங்கிய கிராஅத், காலை உபதேசத்தின் விளக்கம் வெள்ளிக்கிழமை மஹோபந்யாசம் ஆகியவை அவர்களை நாளுக்கு நாள் அறிவில் வளருமாறு

செய்தது. அல்லாஹ்வும் அவர்கள் அகராதி தேட வேண்டிய கடும் பதங்களில் திரு குர்ஆனை இறக்க வில்லை. அது யாருக்கு முதலில் கொடுக்கப்பட்டதோ அவர்கள் பண்டிதத் தன்மையும் இலக்கணத் தன்மையும் அகராதியும் இல்லாமலே உணருமாறு எளிய பதங்களில் ஆழ்ந்த கருத்துக்களை உபதேசித் தருளினன். இவ்வாறு அல்லாஹ்விடமிருந்து அடையப் பெற்றதை, நபி (ஸல்) தன்னைச் சுற்றிலும் இருந்த ஸஹாபாக்களுக்குக் கொடுக்க, அவர்கள் மற்றவர்களுக்கும் அங்ஙனமே கொடுக்குமாறு செய்தான்.

'தொட்டிலிலிருந்து கட்டைக்குச் செல்லும் வரை அறிவு வளர்ப்பது கடமை' என்று நபிகள் நாயகம் (ஸல்) கூறினர்கள். ஒவ்வொரு ஸஹாபாவும் எந்த நிமிஷம் முஸ்லிமானரோ, அது முதல் மவுத்து வரும் வரை, தினசரி ஜோலியுடன், திரு குர்ஆன் உபதேசம் ஆகியவைகொண்டு அறிவு பெற்றுத் தன்னல் இயன்றவரை மற்றவர்களுக்கு அறிவு தானம் செய்பவராக விளங்கினர்.

உமர் (றலி) எழுதப் படிக்கத் தெரியாதிருந்த உம்மி தான். எத்தகைய பண்பும் அற்ற முரடராக வும் இருந்தவர் தான். எனினும் சில ஆண்டுகள் தொழுகை கிராஅத்துகளைச் செவியில் வாங்கி மனதில் சிந்தித்ததும், நபியின் தினசரி உபதேசமும், வாராந்திர மஹோபந்யாசமும் அவரை உலகில் நிகரற்ற அறிஞராக்கி விட்டன. ஓர் ஆங்கில ஆசிரியர், 'உலகிலேயே உமர் போன்ற அரசியல்வாதி தோன்றியதில்லை' என்று எழுதியுள்ளார். இந்த அரசியல்வாத ஞானத்தை உமர் (ரலி) எந்தக் கலாசாலையிலோ மத்ரஸாவிலோ படிக்கவில்லை.

தொழுகையில் திரு குர்ஆன் ஆயத்துகளை ஓதிச் சிந்தித்ததும், நாயகத்தின் பேச்சுகளைக் கேட்டதுமே அத்தகைய அறிவுச் சுடரை அவர்களுக்கு அளித்தது.

எந்த திரு குர்ஆனிலிருந்து அன்றைய தேவைக்குத் தக்கப்படி நபிகள் நாயகம்(ஸல்) ஆயத்துகளைத் தொழுகையில் ஓதினார்களோ, அதே திரு குர்ஆன் இன்றும் அழியாமல் இருக்கிறது. இருபத்து மூன்று ஆண்டுகளில் என்னென்ன நபிகள் நாயகம் (ஸல்) உபதேசித்தருளினார்களோ அவைகளும் ஹதீஸில் அழியாமல் இருக்கின்றன. இன்றும் மதீனா ஜோதியை மறுபடி பிரகாசிக்கச் செய்வதற்குரிய சகல சுடர்களும் திரு குர்ஆன், ஹதீஸில் அழியாமல் இருக்கின்றன. எனினும், முஸ்லிம்கள் தங்கள் பிறப்புரிமையான நிகரற்ற புதையலின் அருமையைச் சரிவர உணராதிருக்கின்றனர். நாளுக்கு நாள் அறிவுச் சுடரும் ஆத்ம சக்தியும் உண்டாக்கிக் கொடுத்த தொழுகை கிராஅத்தும், வெள்ளிக்கிழமை உபந்யாசங்களும் அர்த்தமற்ற சடங்குகளாக மட்டும் இன்று நிறைவேற்றப்படுகின்றன. நபிகள் நாயகம் (ஸல்) காட்டிய வழிப்படி, நம்முடைய தினசரி அறிவுச் சுடரும் ஆத்ம சக்தியும் அதிகரிக்கும் வாழ்வாக நாம் திருத்தி அமைத்துக்கொள்ள இனி அதிக அவகாசமில்லை என்பதை நாம் உடனடியாக உணர வேண்டும்.

## முஸ்லிம் என்றால் யார்?

குல்: இன்ன-ஸலாத்தீ-வ-நுஸுகீ-வ-மஹ்யாய-வ-மமாத்தீ-லில்லாஹி-ரப்பில் ஆலமீன்; லாஷரீக்க-

லஹூ; வ-பி தாலிக்க-உமிர்த்து-வ-அன- அவ்வலுல் முஸ்லிமீன்! (ஸூரா-அன் ஆம் 162, 163)

"எனது தொழுகையும் எனது சேவைகளும் எனது ஜீவியமும், எனது மரணமும், அகிலங்களைச் சிருஷ்டித்துச் சம்ரட்சித்து வரும் இறைவனுக்கே உரித்தானவை. அவனுக்கு இணை துணை நிகர் கிடையாது. அதை என் கொள்கையாகக் கொள்ளுமாறு ஏவப்பட்டுள்ளேன். யானே முதலாவது முஸ்லிமாக இருக்கிறேன் என்று (நபியே) நீர் சொல்வீராக!"

ஒரு முஸ்லிமுடைய கொள்கை என்ன, ஒரு முஸ்லிம் தனது கொள்கையை வர்ணிப்பது எப்படி என்பதைக் காட்டும் இரு ஆயத்துகள் இவை. ஆண்டவனின் உத்தரவு மேற்கண்ட ஆயத்துகளின் வாயிலாக வந்தபோது, முதலாவது முஸ்லிம் என்ற முறையில் நபிகள் நாயகம்(ஸல்) உச்சரித்த கொள்கைப் பிரகடனம் இது. பெயரிலும் லேபலிலும் கோலத்திலும் மட்டும் முஸ்லிம்களாக இல்லாது, உண்மையிலேயே முஸ்லிமாக விரும்புகிறவர்கள் உச்சரிக்க வேண்டிய கொள்கைப் பிரகடனம் இது!

வெறும் சடதத்துவப் பொருட்களை நம்புபவன் முஸ்லிமன்று. லெனினுடையவும், ஸ்டாலினுடையவும் கொள்கை என்ன தெரியுமா? சடதத்துவம் தவிர வேறு ஒன்றும் கிடையாது என்பது. வெறும் சடதத்துவப் பொருள் மட்டும் உண்டு என்பதுதான் கம்யூனிஸத்தின் அடிப்படை. அதற்கு நேர்மாற்றமான கொள்கையுடையது இஸ்லாம். ஒரு முஸ்லிமுடைய வாழ்வில் அவன் செய்யக்கூடிய நன்மைகள், சேவைகள், தியாகங்கள், பரோபகாரங்

கள் தான் அதிமுக்கியமானவை. சுய பிரதி பிரயோ ஜனமின்றி அல்லாஹ்வை முன்னிட்டுச் செய்யும் நன்மைகளே முக்கியமானவை. இவைதான் நுஸுக் (தியாகம், உழைப்பு, சேவை) என்பது. இவ்வாறு அவன் அல்லாஹ்வை முன்னிட்ட ஜீவியம் நடத்து வதற்கு உள்ள சுடர், சக்தி, பொறுமை, திடம் ஆகிய வற்றைத் தினசரி ஆண்டவனிடமிருந்து அவன் அடையும் வழிதான் ஸலாத் (தொழுகை) என்பது. அளிக்கப்பட்ட ஜீவியத்தை முற்றிலும் தம் சொந் தப் பலனுக்கு உபயோகப்படுத்துவார்கள் மற்றவர் கள்; முஸ்லிம்கள் தங்களின் ஜீவியத்தையே ஆண்ட வனுக்கு அர்ப்பணம் செய்து விடுவார்கள். அவர் களுடைய ஜீவியமும் அல்லாஹ்வை முன்னிட்டதாக ஆகிவிடுகிறது; அவர்களுடைய மரணமும் அல் லாஹ்வை முன்னிட்டதாக ஆகிவிடுகிறது. அல் லாஹ்வை முன்னிட்டு உயிர் கொடுக்க வேண்டு மாயின் எந்த நிமிடமும் உயிரைக் கொடுத்து விடத் தயாராக இருப்பான் முஸ்லிம்.

இவ்வாறு ஒரு முஸ்லிம் தன்னுடைய ஜீவி யத்தை அல்லாஹ்வுக்கு அர்ப்பணம் செய்துவிடும் போது, அவனுடைய ஆத்மாவும் மனமும் உடலும் அல்லாஹ்வுக்குச் சொந்தமான, அல் லாஹ்வுக்கு உரித்தான பொருள்களாகி விடுகின்றன. அத்தகைய முஸ்லிமின் மனத்தை உடைப்பதா யினும் உடலை அடிப்பதாயினும் அல்லாஹ்வுக்குச் சொந்தமான ஒரு பொருள் மீது கை வைப்ப தாகிவிடுகிறது. கொடுக்கப்பட்ட அற்ப ஜீவி யத்தை அவனுக்கு நாம் அர்ப்பணமாகக் கொடுத்து விடும்போது அதைவிடப் பன்மடங்கு அதிக உயர் வான ஜீவியத்தை அவன் நமக்குப் பதிலாக அளிக்க

வேண்டியதும் அவன் அருள் வாக்குப்படி அவசிய மானதாகி விடுகிறது.

இந்த இரண்டு ஆயத்துகளை நன்கு சிந்தித்துப் பாருங்கள். இவற்றில் உள்ளபடி,

**"இன்ன-ஸலாத்தீ-வ- நுஸுகீ-வ- மஹ்யாய-வ-மமாத்தீ-லில்லாஹி-ரப்பில் ஆலமீன்-லா-ஷரீக்கலஹு"**

பிரதிக்ஞை செய்யக் கூடியவர்களாக நீங்கள் இருக்கிறீர்களா வென்று யோசித்துப் பாருங்கள். தொழுகையில் தினசரி ஐந்து நேரங்களில், "இய்யாக்க நஃபுது-வ-இய்யாக்க நஸ்தயீன்" (உனக்கு மட்டும் யாங்கள் தொண்டர்கள்; உன்னுடைய உதவியை மட்டும் எதிர்பார்த்து நிற்பவர்கள்) என்று பிரதிக்ஞை கொடுக்கிறோமே ஆண்டவனின் சந்நிதானத்தில், அதற்கு விரிவுரைதான் இன்ன-ஸலாத்தீ என்று ஆரம்பிக்கும் இந்தப் பிரதிக்ஞை.

பெயர் அரபிப் பெயர்; தலையில் தொப்பி; நாங்கள் முஸ்லிம்கள் என்று கூறிக் கொள்ளுதல்; இவை ஊர் ஆசாரத்துக்குப் போதுமானவை. அரபியில் எழுத்துப் பிழையும் இலக்கணப் பிழையுமில்லாது உச்சரிக்க வேண்டியவற்றை உச்சரித்து விட்டால் பிக்ஹு சட்டம் நிறைவேறிவிடும். ஆயினும், தினசரி ஆண்டவன் முன்னால் நின்றுகொண்டு சொல்வது ஒன்றாகவும், நாம் உண்மையில் இருப்பது மற்றதாகவும் இருப்பின், முஸ்லிம்களுக்கு ஆண்டவன் வாக்களித்துள்ள இம்மை பற்றிய வரங்களையோ மறுமை பற்றிய வரங்களையோ நாம் எதிர்பார்க்க முடியாது. ஆகையால், அரபியில் நீங்கள் சொல்வது என்னென்ன, சொல்ல வேண்டியது என்ன என்பதை எழுத்துப்

பிழையும், இலக்கணப் பிழையும், உச்சரிப்புப் பிழையுமின்றி உச்சரிப்பதுடன், அவற்றின் அர்த்தங்களும் என்னவென்பதை உணர ஆரம்பியுங்கள். திரு குர்ஆனில் ஸூரா 'ஸப்' பில்,

**யா-அய்யுஹல்லதீன - ஆமனு - லிம - தகூலூன - மாலா-தப்அலூன்**

(ஈமான் உள்ளவர்களே, நீங்கள் நடத்தையில் அனுஷ்டிக்காததை ஏன் நாவினுல் சொல்கிறீர்கள் ?) என்று அல்லாஹ் சவால் விட்டிருக்கிருன்.

**கபுர-மக்த்தன்-இந்தல்லாஹி-அன்-தகூலூ--மா-லா தப்அலூன்**

(நீங்கள் நடத்தையில் அனுஷ்டிக்காததை நாவால் சொல்லிக் கொண்டிருப்பது அல்லாஹ் கடுமையாக வெறுக்கும் விஷயமாக இருக்கிறது) என்று மறு ஆயத்தில் கூறுகிருன்.

திரு குர்ஆன் ஆயத்துகளில் எதிரொலித்துக் கொண்டிருக்கும் அல்லாஹ்வின் எச்சரிக்கைகள் எப்பொழுதோ வரப்போகும் கியாம நாளைப் பற்றியவை, பிறகு பார்த்துக் கொள்வோம் அவற்றை, உலகமும் சடதத்துவமும்தான் சதமானவை என்று நினைத்துக்கொண்டிருந்த காலம் மலையேறி விட்டது. ஹதீஸில் எதிரொலித்துக்கொண்டிருக்கும் நபியின் முன்மாதிரிகளையும் உபதேசங்களையும் கவனிக்காதிருந்து சொந்த விஷயங்களை மட்டும் கவனித்துக் கொண்டிருக்க முடிந்த காலம் கடந்துவிட்டது. அல்லாஹ்வின் உத்தரவுகளையும் நபியின் விளக்கங்களையும் மக்கள் அலட்சியமாகப் பாவித்துக் கொண்டிருந்தும் அவர்களைப் பூமியும் அல்லாஹ்வின் இதர சிருஷ்டிகளும் சுகமாக இருக்க விட்டுக் கொடுத்துக்கொண்டிருந்தன. "இத்தனை

காலம்வரை விட்டுக் கொடுங்கள்; பிறகு, இறுக்கிப் பிடியுங்கள். இத்தனை காலம் வரை சட்டம் இருக்கிறது, சட்டம் இருக்கிறது என்று சொல்லிக் கொண்டிருங்கள்; பிறகு சட்டங்களை அமுல் நடத்துங்கள்" என்பது ஆண்டவனின் ஆதி உத்தரவுகளில் ஒன்று. ஆண்டவனின் சட்டங்களை அறிய முயற்சிக்காத, அறிந்து திருந்த முயற்சிக்காத சகலரும், காலமும் தங்களுக்கு எதிரியாகி விட்டதைக் காண்பார்கள்; பூமியும் காற்றும், நெருப்பும், தண்ணீரும் தங்களுக்கு எதிரியாகி விட்டதைக் காண்பார்கள்; மலக்குகள் தங்களுக்கு எதிரிகளாகி விட்டதைக் காண்பார்கள்.

துஆ பரக்கத்துகளும் இருந்தன. மூதாதையர்களின் துஆ பரக்கத்துகள், பெரியார்களின் துஆ பரக்கத்துகள் ஆகியவை நாம் ஆண்டவனுடைய சட்டத்துக்கு எட்டிக்குப் போட்டியாக நடந்தாலும் நம்மைத் தாங்கிக் கொண்டிருக்க உதவின. ஆயினும், பெரிய கியாம நாள் வரும் காலத்திலும் சரியே, சிறிய கியாம சகாப்தம் உலகில் நடக்கும் காலத்திலும் சரியே, எல்லா சிபாரிசுகளும் ரத்தாகிவிடும்; நம் நம் தராசு சரியாக இல்லாத நிலைமையில் நம்மை யாராலும் காப்பாற்ற முடியாது. இரக்கம், விட்டுக் கொடுத்தல் ஆகியவற்றின் சகாப்தமும் உண்டு. நீதியின் சகாப்தமும் உண்டு. அதுபோல ரஸுலுல்லாஹ் பற்றி அவர்கள் ரஹ்மத் ஆனவர்கள் என்ற திரு குர்ஆன் ஆயத்துகளைப் பிரியமாக ஓதுவார்கள். பொய்யர்களையும் வேஷதாரிகளையும் ஈவு இரக்கமின்றித் தகர்த்தெரியுமாறு நபிக்கு உள்ள உத்தரவு திரு குர்ஆனில் இருப்பதை ஜாடையாக விட்டு விடுவார்கள்.

யா - அய்யுஹன் - னபிய்யு ! ஜாஹிதில் குப்பார - வல் - முனுபிகீன - வக்லுள் - அலைஹிம் — வ-மஃவா ஹும் ஜஹன்னம் - வ - பிஃஸல் மஸீர் (சத்தியத்தை நிராகரிப்பவர்களுடனும் வேஷத்தில் முஸ்லிம்களாக இருப்பினும் உண்மையில் முஸ்லிம்களாக இல்லாத முனுபிக்குகளுடனும் எதிர்த்துப் போர் கொடுப்பீராக! அவர்கள் விஷயத்தில் நபியே ! நீர் கடுமையானவராக இருப்பீராக! அவர்கள் செல்ல வேண்டிய இறுதி இடம் நரகம்)

என்பது இத்தகைய ஆயத்துகளில் ஒன்று. உலகம் முஹம்மது (ஸல்) அவர்களின் ஜமாலை மக்காவில் பதிமூன்று ஆண்டுகள் சொச்சம் கண்டது. சுமார் பத்து ஆண்டுகளுக்கு மதீனவில் அவர்களின் ஜலாலை உலகம் கண்டது. தங்களுக்கு முப்பது ஆண்டுகளுக்குப் பின் உண்மை கிலாபத் முடியுமென்று அவர்கள் செய்த தீர்க்கதரிசனப்படி அது முடிந்து ஹிஜ்ரி 40 முதல் முடி ஆட்சிகள் உண்டாயின. எனவே ஹிஜ்ரி 40 முதல் பதிமூன்று நூற்றுண்டுகள் வரையில் உலகில் நபி(ஸல்) அவர்களின் ஆத்மாவின் ஜமாலின் சுடருடைய காலம். அதற்குப்பின், ஜலாலுடைய சுடரின் காலம் ஆரம்பமாகும். அதுதான் சிறிய கியாமம் என்பது. இதற்கெல்லாம் பின்தான் உலக அழிவும் பெரிய கியாமமும்; ஆயினும், அவை அதிக தூரத்தில் இருப்பவை.

மக்காவில் அவர்கள் தொழுது கொண்டிருக்கையில் அவர்களின் தலையில் குப்பையைக் கொட்டியும் சகித்துக்கொண்டிருந்த ரஸூலுல்லாஹ் ! தாயிப் நகரிலுள்ளவர்கள் கல்லால் அடித்து விரட்டியபோது அதையும் சகித்துக் கொண்டு அவர்களுக்காகத் துஆச் செய்த ரஸூலுல்லாஹ் ! வாஸ்

தவம்தான். ஆயினும் பத்ரு மைதானம், உஹது மைதானம், ஹுனைன் மைதானத்தில் என்ன காட்சியை அவர்கள் அளித்தார்கள் என்பதையும் மறந்து விடாதீர்கள். மதீனாவில் உள்ள தனவந்தர்களாக இருந்த ஒரு கோஷ்டியினர் உண்மையில் முஸ்லிமாக இருக்காது கோலத்திலும் சடங்கிலும் மட்டும் முஸ்லிம்களாக இருந்தபோது, அவர்கள் விஷயத்தில் எப்படி நடந்து கொண்டார்கள் என்பதையும் மறந்து விடாதீர்கள்!

ஞானிகளாக இருந்த சில உர்துக் கவிஞர்கள் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஜலால் வெளியாகாது இருப்பதால் அல்லவா அல்லாஹ்வின் சட்டத்தை உலகம்புறக்கணிக்க முடிகிறது, முஸ்லிம்கள் சொல் ஒன்றாகவும், செயல் ஒன்றாகவும் முனாபிக்குகளாக இருக்க முடிகிறது என்று பாடியதுண்டு. ஓர் உர்துக் கவிஞர் நெருப்புப் பொறி பறக்கும் ஒரு கவியில்,

**ஜண்டா-யஹான்-ஜலாலெ-முஹமத்-கா-காட்-தே!**
(இறைவனே, இங்கு மறுபடியும் முஹம்மதின் ஜலாலுடைய கொடி ஊன்றப்படுமாறு செய்வாயாக!)

என்று பாடினார். அந்தக் கொடி ஊன்றப்படுவதையும் பறப்பதையும் உலகம் பார்க்கத்தான் போகிறது. அல்லாஹ்வின் கலீபா ஆகிய முஹம்மது (ஸல்) அவர்களின் ஆத்மா சகித்துக்கொண்டிருக்கும் வரையில், மலக்குகளும் பூமியும் வானமும் என்ன செய்யும்? சகித்துக் கொண்டுதானே இருக்கும்! மக்காவில் எந்த சகிப்புத்தன்மையுடன் இருந்தார்களோ, அதை ஆண்டவனின் உத்தரவுப்படி, தூக்கி எறிந்து விட்டு, துஷ்டர்களை நிக்ர

ஹித்து சிஷ்டர்களை பரிபாலனம் செய்வதற்குத் தனது ஆட்சியை ஸ்தாபிப்பதற்கு மதீனாவுக்குப் புறப்பட்டது போல், ரஸூலுல்லாஹ்வுடைய ஆத்மாவுக்கு உலகில் மதீனா சகாப்தத்தை உண்டாக்குமாறு உத்தரவு ஏற்பட்டு அவர்கள் மக்காவிலிருந்து ஹிஜ்ரி சகாப்த்த்தை ஆரம்பித்தது போல், மக்கா நிலையிருந்து மதீனா நிலைக்கு மாறும் போது அவர்களுடைய ஆதிக்கத்தில் அல்லாஹ்வைத்து அருளிய பூமியும் வானமும் காற்றும் இடமும் காலமும் (காபிர்களையும்) சத்தியத்தை நிராகரிப்பவர்களையும் (முனாபிக்குக்களையும்) வேஷதாரிகளையும் எதிர்க்க ஆரம்பித்துவிடும். இது வெறும் பகற்கனவன்று. நடக்கவிருக்கும் சரிதை என்பதை நாமும் நமது சந்ததிகளும் பார்க்க விருக்கிறோம். தாயிபு நகரிலிருந்து திரும்பியபோது கல்லெறியால் காலில் இரத்தம் வடிந்து கொண்டிருந்த சமயம் துஆச் செய்த ரஹ்மத்துன்லில் ஆலமீனைத் தோற்றுவித்த அல்லாஹ்வுக்கு எல்லாப் புகழும்! பத்ரு மைதானத்தில் 313 பேர்கள் சகிதம் வாளை ஏந்தி நின்று கோணியிருந்த உலகத்தையே நேர்படுத்திவிட்ட வீர தீரரான ரஸூலுல்லாஹ்வைத் தோற்றுவித்த அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும்! அல்லாஹு அக்பர்!

## வெறும் போதனைகள் மட்டுமன்று

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய ஜீவியத்தில் அவர்கள் திருகுர்ஆன் ஓதிய சமயத்தில் பொதுவாக அது 'முபீன்' (விஷய விளக்கச் சுடர் கொண்டது) ஆக இருந்து வந்திருக்கிறது. சில சம

யங்களில், ஹகீம்' ('குன்' என்ற தொனியுள்ள தெய்வீக உத்தரவு, அவன் நாமம் கொண்டு, பிரகடனப் படும் உத்தரவிடுதல்) ஆகவும் இருந்திருக்கிறது. * உதாரணமாக, ஹிஜ்ரத் சமயத்தில், மக்காவில் அவர்களின் வீட்டை எதிரிகள் சூழ்ந்துகொண்ட போது ஸூரா யாஸீனில் உள்ள 'வ-ஜ அல்னா-மின்-பைனி-அய்தீ ஹிம்-ஸத்தன்' என்று ஆரம்பிக்கும் ஆயத்தை ஓதிவிட்டு வெளியேறினதாக ஹதீஸில் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த ஆயத்து, திரு குர்ஆன் மொழிகள் வெறும் போதனைகளாக இருக்காது நடந்து தீரும் உத்தரவுகளாகும் காலத்தை வர்ணிப்பதாகவும், அச்சமயத்தில் சத்தியத்துக்கு மாறு செய்தவர்கள் மதியிழந்து கண் தெரியாது கெட்டலைபவர்களாக இருப்பார்களென்று கூறுவதாகவும் இருக்கிறது. இந்த ஆயத்தை நபிகள் நாயகம் (ஸல்) சூழ்ந்திருந்த எதிரிகளை நினைத்துக்கொண்டு 'முபீன்' என்ற தொனியில் ஓதாமல், 'ஹகீம்' என்ற தொனியில் ஓதியபோது, தம் கண் முன்னாலேயே நபிகள்

---

* ஆண்டவனின் சொல்கொண்டு சகலமும் உருவானவை அவனுடைய மொழி என்றால் விளையாட்டன்று. அவனுடைய மொழிக்குத்தான் அரபியில் 'குர்ஆன்' என்பது. இம்மொழிகள் விஷய விளக்கம் கொடுப்பவைகளாகவும் (முபீன்) இருக்கின்றன; அத்துடன், அவனை அறிந்து அவன் அனுமதி கொண்டு அதற்குரிய அவனது (அஸ்மா) நாமங்களைக் கொண்டு உச்சரிக்கப்படின், உருவாகி விட வேண்டிய தெய்வீக உத்தரவுகளாகவும் இருக்கின்றன.

உத்தரவு என்பதற்கு அரபியில் ஹுக்கும் என்று சொல்லப்படும். உத்தரவளிப்பதைக் காட்டும் சொல் 'ஹகீம்' என்பது.

நாயகம் (ஸல்) வெளியேறியும் அந்த எதிரிகள் அதைக் காண முடியாதவர்களாகி விட்டார்கள்.

ஒரு காலம் வருவதைப்பற்றியும் ஸூரா யாஸீனில் முன்னெச்சரிக்கை யிருக்கிறது. அது இறுதிப் பெரும் கியாம நாளையும் குறிப்பிடுவது; அத்துடன் உலகில் ஏற்படவிருப்பதாக முன்னெச்சரிக்கை செய்யப்பட்ட சிறிய கியாமத்தையும் குறிப்பிடுவது. அப்பொழுது அனைவரும் 'ஹாதா-மா-வ அதர் ரஹ்மானு-வ ஸதகல் - முர்ஸலூன்' ('ரஹ்மான் முன்னெச்சரித்தது இதுதான்! தூதர்கள் சொன்னதெல்லாம் சத்தியமாகவன்றோ இருக்கிறது') என்று அலறுவார்களாம். அந்தக்காலம், சிறிய கியாமம் ஆக, உலகில் ஏற்படும் காலத்தில், திரு குர்ஆன் 'முபீன்' ஆக இருக்காது; 'ஹக்கீம்' ஆக இருக்கும். என்னென்ன ஆண்டவனுடைய சட்டம், ஆண்டவனது சித்தம் என்று கூறப்பட்டதோ அவை நடந்து தீரும்!

மேலே யாம் குறிப்பிட்ட 'வ - ஜஅல்ஞ - மின் - பைனி' என்று ஆரம்பிக்கும் ஆயத்தை எடுத்துக் கொள்வோம். இந்த ஆயத்து, போதனையளவில் நிற்கும் காலம் முடிந்து, உத்தரவாகத் தொனிக்கும் போது அநியாயத்துக்கு ஆளாக்கியவர்கள் மதி

---

திரு குர்ஆன் விஷய விளக்கம் அளிப்பது (முபீன்) மட்டிலுமன்று; 'ஹகீம்' (நிறைவேற்றப்படும், உருவாகும், உத்தரவுகளை அளிக்கும்) மொழியாகவும் இருக்கிறது.

அறம் பாய்ந்தது, வாக்கு பலித்துவிட்டது என்கிறீர்களே! ஒவ்வொரு ஆயத்தும் போதனைக்குப் போதனையாகவும் இருக்கிறது; அதுமட்டு மின்றி பலிக்கும் வாக்காகவும் பாயும் அறமாகவும் இருக்கிறது. வல்-குர்ஆனில் —ஹகீம்!

யிருந்தும் மதியற்றவர்களாக ஆகிவிடுவார்கள். அது போலவே, 'இன்னமா - துன்திரு -மனித்தப அத்-திக்ர' என்று ஆரம்பிக்கும் ஆயத்தில் கூறப்பட்டிருப்பவர்கள் சரியான மன உதிப்பு, சரியான போதனை, சரியான யோசனை, சரியான வழிகாட்டுதல் ஆகியவற்றை அடைபவர்களாக ஆகிவிடுவார்கள்!

இதுகாறும் அர்த்தந் தெரிந்தவர்களுக்குப் போதனைகளாகவும், அர்த்தம் தெரியாதவர்களுக்கும் ஓர் ஆத்ம சாந்தியைத் தரும் இன்மொழிகளாகவும் திரு குர்ஆன் ஆயத்துகள் இருந்து வந்தன. இனியோ அவற்றில் உள்ள கருத்துக்கள் பலிப்பதற்குள்ள காலம்! திரு குர்ஆன் ஆயத்துகளும் அதன் வியாக்கியானமாகிய ஹதீஸும் இதுகாறும் மதீனுவின் சித்திரத்தைக் காட்டுபவைகளாக இருந்தன; இனியோ மதீனுக்கள் உண்டாகி, மதீனு இல்லாத குடிகள் தகர வேண்டிய காலம். ஆண்டவன் இன்ன சொன்னுன் என்று ஓதிக்கொண்டிருந்த காலம் மலையேறிவிட்டது. இதைச் சொல்லுங்கள் (குல்) என அவன் சொன்னுன் என்று அர்த்தம் தெரியாது ராகத்தை மட்டும் ரசித்துக் கொண்டிருந்த காலம் கடந்து விட்டது. எதை அர்த்தம் தெரியாது பலர் ஓதிக்கொண்டிருந்தார்களோ அதில் சொல்லப்பட்டவைகள் நிஜ உலகில் உருவாகிவரும் காலம் வந்துவிட்டது.

ஆகையால், திரு குர்ஆன் ஹதீஸின் ஞானத்தை அதிகரிப்பதும், அவற்றில் எத்தகைய மனம், குணம், ஆத்மா, சொல், செயல் உள்ளவர்களாக மானிடர்கள் ஆகுதல் வேண்டுமென்று ஆண்டவனின் உத்தரவுகள் இருக்கின்றனவோ, அத்தகைய மனம், குணம், ஆத்மா, சொல்,

செயல் உள்ளவர்களாக ஆகுதலும் வேண்டும். அவ்வாறு ஆகுபவர்கள், உத்தரவுப்படி நடப்பவர்கள், வாக்களிக்கப்பட்ட சன்மானங்களை இம்மையிலும் அடைந்து கொள்வார்கள். உத்தரவு மீறுவதற்குரிய தண்டனைகள் என்று சொல்லப்பட்டவைகளையும் கண்முன் கண்டுகொள்வார்கள்.

யாஸீன் என்ற இரு அம்சங்களும் எந்த நூரெ-முஹம்மதிய்யாவைக் குறிப்பிடுகின்றனவோ அதைப் பிறப்புரிமையாக அடைந்துள்ள நாம் இனியும் அகக் கண்ணைத் திறக்காத குறையினால் ஜோதியைக் காணத் தவறும் நிலைமையில் இருக்கக் கூடாது. எனவே, தினசரி சிறிது நேரம் திரு குர்ஆன், ஹதீஸ் கொண்டு நம் அறிவைப் பண்படுத்துவதிலும், மனம், குணம், ஆத்மா, சொல், செயலைச் சீர்படுத்தும் சிந்தனையிலும் செலவழித்து வருவோமாக.

## முற்போக்கு மனப்பான்மை வேண்டும்

'அல்லாஹ்வின் வாள்' (ஸைபுல்லாஹ்) என்று நபிகள் நாயகம் (ஸல்) அவர்களால் அழைக்கப்பட்ட காலித் பின் வலீத் யுத்த களத்தில் 'முன்னேறுங்கள், சுவர்க்கம் உண்டு; பின்வாங்கினால் நரகம்தான்!' என்று கர்ஜிப்பதுண்டு. யுத்தக் களத்தில் மட்டுமன்று, ஜீவியம் எனும் போரிலும் முன்னேற்ற மனம்தான் அவசியமானது. உலகில் ஒன்று முன்னேறும் சமூகமாக இருக்கலாம்; அல்லது பின்வாங்கும் சமூகமாக ஆகலாம். ஒரே இடத்தில் அசையாது ஸ்திரமாக இருக்க முடியுமென்பது ஆண்டவன் அமைத்திராத விஷயம்; இயற்கையில் இல்லாத விஷயம்.

அல்லாஹ்வின் சிருஷ்டியின் அமைப்பைக் கவனியுங்கள். ஏதாவது அசையாது ஓர் இடத்தில் ஓய்வுடன் இருக்கிறதா? கடும் வேகத்தில் பூமி சுழன்று கொண்டிருக்கிறது; 24 மணி நேரத்தில் ஒரு நாளை முடித்துவிட்டு மறு நாளை உண்டாக்கிக்கொள்கிறது. எந்த நட்சத்திரமாவது அசையாதிருக்கிறதா என்று பாருங்கள். குல்லுன் - பீ-பலக்கின்-யஸ்பஹூன் (சகலமும் அதுதன் வட்டத்தில் சதா சுழன்றுகொண்டு அச்சுழற்சிகொண்டு புதுப்புதுச் சூழ்நிலைகளை உண்டாக்கிக் கொண்டிருக்கின்றன.) மனிதர்களில் தான் தங்களின் ஜீவியத்தின் சுழற்சியைத் தொடர்ந்து நடத்திப் புதுப்புது சூழ்நிலைகளை ரசித்துப் புதுப்புது ஞானங்களை அடைந்து புதுப்புது அனுபவங்களைப் பெறும் முற்போக்காளர் தவிர அல்லாஹ் அமைத்த தஸ்பீஹின் சட்டத்தை—சுழற்சியின் சட்டத்தை—உடைத்து, சுழற்சி யில்லாதிருக்க முயலுபவர்களும் உண்டு; முற்போக்குச் சுழற்சிகொண்டு முன்னேறாது பின்னால் சுழன்றுகொண்டுபோக முனைந்து இறுதியில் நாசத்தைக் காணுபவர்களும் உண்டு.

ஆண்டவன் சிருஷ்டித்துக் கொடுத்துள்ள இவ்வுலக வாழ்க்கை விசித்திரமானது. உலகில் எதுவும் நிலையானதன்று. அந்தரத்தில் சதா சுழன்று கொண்டிருக்கும் பூமியில் நாம் இருக்கிறோம். ஒவ்வோர் அணுவுக்குள்ளும் சதா சுழற்சி நடந்து கொண்டிருக்கிறது. ஒவ்வோர் அணுவும் சதா அழிந்து சதா புத்துயிர் பெற்றுக்கொண்டு இருக்கிறது. அணுக்குண்டு என்கிறார்களே, அது என்னவென்பதைப்பற்றி நன்கு சிந்தித்துப் பாருங்கள். நமது சாதாரணக் கண்ணுக்குத் தண்ணீரில் ஒரு

துளி என்பது அதிகச் சிறிய பொருளாகத் தெரிகிறது. பூதக்கண்ணாடி கொண்டு பார்த்தால் அந்தத் துளியில் லட்சக்கணக்கான கிருமிகள் துடித்துக்கொண்டிருப்பதைப் பார்க்க முடிகிறது. அணுவென்பது அந்தக் கிருமிகளைவிடச் சிறியது. அங்ஙனமே தூசி என்பது சிறிய பொருளாக நம் கண்ணுக்குத் தெரிகிறது. எத்தனையோ அணுக்கள் சேர்ந்து ஒரு தூசியாகிறது. இத்தகைய நுண்ணியதிலும் நுண்ணிய பொருளாகிய அணுவைப் பூதக் கண்ணாடிகொண்டு பெரிதாக்கிப் பார்க்கும்போது என்ன தெரிகிறது? மத்தியில் ஒரு சுடர். அதைச் சுற்றிலும் பல சுடர்கள் சுற்றிக் கொண்டிருக்கின்றன. சடதத்துவ லோகம் நமக்குத் தண்ணீராகவும் மண்ணாகவும் பல பொருள்களாகவும் தெரிகிறதல்லவா! இவைகளெல்லாம் அணு எனும் சுடர்கொண்டு சமைந்திருப்பவையே. எப்படி அணுவைப் பார்க்கக்கூடிய கருவியை ஸைன்ஸ் கொண்டு கண்டுபிடித்திருக்கிறார்களோ அங்ஙனமே, அணுவுக்குள்ளிருந்து சுற்றிக் கொண்டிருக்கும் அணுச் சுடர்களைச் சிதறடிப்பதற்குரிய கருவியையும் கண்டுபிடித்து விட்டார்கள். ஓர் அணுவுக்குள் உள்ள அணுச் சுடர்களின் சீரைக் குலைத்துவிடும்போது, ஓர் அணுவை மறு அணு ஒட்டிக் கொண்டிருக்கும் நிலையில் சுற்றிலும் உள்ள அணுக்களில் உள்ள சுழற்சியின் சீர்-தஸ்பீஹின் சீர்-குலைந்து விடுகிறது. சமீபத்தில் உள்ள அணுக்களெல்லாம் உருக் குலைந்து மறு உருவை அடைய நேரிடுகிறது. இதன் பயனாய் என்ன ஆகிறது? ஓர் இடத்தில் ஓர் அணுவின் சீரைக் குலைத்து விடும் ஓர் அணுக் குண்டைப் போட்டு விட்டால், அந்த இடத்தைச் சுற்றிலும் சுமார் அரை மைல் தூரத்

துக்கு என்னென்ன இருக்கின்றனவோ அவைகள் அழிந்து காணுது போய்விடுகின்றன. அந்த அரை மைல் வட்டாரத்தில் ஒரு லட்சம் பேர்கள் இருக்கிருர்களென்று வைத்துக் கொள்வோம். குண்டு வெடித்த பின் அந்த ஒரு லட்சம் பேர்களையும் அங்கே கண்டு கொள்ள முடியாது. இந்திரியத்திலிருந்து விளைந்துள்ள மனிதன், நபி (ஸல்) அவர்களின் போதனைகொண்டு உண்டான ஸைன்ஸைப் பெருக்கி உண்டாக்கியுள்ள ஒரு கருவி கொண்டு ஒரு லட்சம் மக்களையும் ஓர் ஊரையும் அக்கினிக் காற்ருக மாற்றிவிட முடிகிறது. அப்படியிருக்க இவ்வுலகையும் இதில் உள்ள சிருஷ்டிகளையும் அவற்றின், சுழற்சிகளையும் மானிட ஜீவியத்தையும் உண்டாக்கி நடத்தாட்டி வரும் சிருஷ்டிக்கத் தகுகிய ஆண்டவனின் சக்தி எப்படி இருக்கும், அவனது கோபாக்கினி ஏற்படுவதென்ருல் எப்படி இருக்குமென்பதை யூகித்துப்பாருங்கள்!

அணுக்குண்டு கொண்டு ஒரு க்ஷணத்தில் இல்லாதொழிக்கப்பட்டு விடக்கூடிய உடல்களையும் பொருள்களையும் மட்டும் ஆண்டவன் மனிதனுக்குக் கொடுத்தில்லை. இத்தகைய அணுக்குண்டை உண்டாக்கக்கூடிய அறிவுச் சக்தியைக் கொடுத்திருப்பவனும் அவனே. அந்த அறிவும் அந்த அறிவு இருக்கக்கூடிய ஆத்மாவும் அணுக்குண்டால் அழிந்து விடக்கூடிய பொருள்களன்று. இந்த உலக ஜீவியத்துடன் அந்த ஆத்மாக்களின் கதை முடிந்து விடுவதற்கில்லை. விளக்கில் திரி இருக்கிறது; திரியில் ஒரு நெருப்பு எரிகிறது; அந்த நெருப்பில் ஒரு வெளிச்சம் இருக்கிறது. விளக்கு என்பது வேறு பொருள்; வெளிச்சம் என்பது வேறு பொருள். இதுபோன்றே

இந்த உடல் ஒரு விளக்கு. இழுக்கும் சுவாசம், உண்ணும் உணவு ஆகிய எண்ணெய் கொண்டு எரிவது ஜீவியம். அந்த ஜீவியத்தில் உள்ள வெளிச்சம் என்பது ஆத்மா. எனவே, ஆத்மா என்பது வேறு பொருள். உடல் என்பது வேறு பொருள். எத்தகைய சுடரான ஆத்மாவாக அல்லாஹ் நம்மைப் படைத்து அருளி இருக்கிறான் என்பதை உணர வேண்டும். அந்த ஆத்மா வுடைய வளர்ச்சிக்காக, அந்த ஆத்மாவின் அறிவுச் சக்தி அதிகமாவதற்காக, உலக வாழ்வில் அல்லாஹ் தனது ரஸூல் மூலம் அளித்துள்ள தீன் சட்டப்படி உலகில் நடந்து அந்த ஆத்மாவின் உயரிய குணங்களைப் பயன்படுத்திக் கொள்வ தற்காக அல்லாஹ், தீன்கொண்டு கற்றுக் கொடுத் துள்ள வணக்க வழிகளைக் கொண்டு ஆத்மாவை நாளொரு வண்ணமும் பொழுதொரு மேனியுமாகச் சுடர் பெறச் செய்வதற்காக, நமக்கு இவ்வுலக ஜீவியத்தின் ஆயுள் அளிக்கப்பட்டிருக்கிறதேயல் லாது வேறன்று. நிலையற்ற இந்த உலகவாழ்வில் நிலையுள்ளதாகத் தெரியும் நிலையற்ற பொருள்களைச் சேமிக்கும் நினைவில், அல்லாஹ் தனது தீன் கொண்டு கற்றுக் கொடுத்திருப்பது என்ன, நம்முடைய ஆத்மா என்றால் என்ன, மறுமை என்றால் என்ன என்பதைப்பற்றிச் சிந்திக்கக்கூட நேரமற்றவர்களாக நம்மில் பலர் இருந்து வருகிறார்கள். இவ்வுலக வாழ்வில் ஒவ்வொரு நாளு டைய ஜீவியம் நமக்குக் கிடைப்பதும் முக்கிய மானது; ஏனெனின் ஒவ்வொரு நாளும், அந்தந்த நாளில் நல்ல மனம் உள்ளவர்களாகவும், நல்ல குணம் உள்ளவர்களாகவும், நல்ல செய்கையுள்ளவர் களாகவும் சுடர் பெறுபவர்வர்களாகவும் இருப்

பது கொண்டு, நமது ஆத்மா மீஜான் எனும் தராசில் தேறுவதற்கு இன்றி யமையாத விளைவு 'உண்டாவதாக இருக்கிறது. ஆகையினால் உண்மை முஸ்லிம்களாக இருப்ப வர்கள் கிடைத்துள்ள ஆயுளில் ஒரு நாளைக்கூட வீணாக்க மாட்டார்கள்; அவர்களின் மறுமைக்குரிய தயாரிப்பு எனும் தஸ்பீஹ் மணியாகிய அவர்களின் ஜீவியத்தில் உள்ள மணிகளாகிய ஒவ்வொரு நாளையும் தீனில் காட்டியுள்ள அமைப்பின்படி-பிளான்படி-திட்டப்படி-நடத்தாட்டி வருவார்கள். வாழ்வில் வணக்கமும் வேண்டும்; குணமும் வேண்டும்; நற்கருமங்களும் வேண்டும். வயிறு நிறைந்து உடலில் சக்தி குன்றுதிருப்பின் போதுமா? இந்த ஜீவியம் என் அளிக்கப் பட்டது, இதற்குப் பிந்திய மறுமை 'வாழ்வுக்கு என்ன தயாரிப்புகளைச் செய்வது என்ற நினைவு வேண்டாமா?

பிழைப்பதற்குரிய ஹலாலான ரிஜ்க் தேடிப் பிழைக்கவும் வேண்டும்; பிழைத்திருப்பது என் என்பதை சிருஷ்டித்த அல்லாஹ் தனது ரஸூல் மூலம் கற்றுக் கொடுத்திருப்பதையும் உணர வேண்டும். ஒவ்வொரு நாளும், பிழைத்திருப்ப துடன், ஹலால் ஆன பொருள் தேடுவதுடன், வணக்கமும் வேண்டும்; சிந்தனையும் வேண்டும்; அறிவு வளர்ச்சியும் வேண்டும்; நற்குணமும் வேண்டும்; அந்த நாளின் ஏடு மஹ்ஷரின் கணக்குத் தயாரிக்கப்படுவதில் நம் ஏட்டில் தினமும் ஏதேனும் நற்கருமமும் சேரும்படி செய்ய வேண்டும். கொடுக்கப்பட்ட அரிய வாழ்நாளை வீணாக்கக் கூடாது. இத்தகைய ஜீவியத்தை நடத்துபவர்களாகி நேற்றைவிட இன்று பக்தி

யிலும், அறிவிலும், குணத்திலும், மன நிலைமையிலும், நற்கருமத்திலும் சிறந்தவர்களாக ஆகவேண்டும்; நாளை இன்றைறவிடச் சிறந்தவர்களாக ஆக வேண்டும். சதா மறுமைக்குரிய ஆத்மீக வளர்ச்சி நடைபெற்றுக் கொண்டிருக்க வேண்டும். அத்தகைய வளர்ச்சியே உண்மை முன்னேற்றம் என்பதை உணரவேண்டும். காலித் இப்னு வலீது முரசு கொட்டியது போல், "முன்னேறினால் சுவர்க்கம்; பின்வாங்கினால் நரகம்" என்பதை ஸ்லோகமாக வைத்து முன்னேற வேண்டும். அல்லாஹு அக்பர்!

## கடமையாற்ற வேண்டிய காலம்

இந்தப் பிரளய சகாப்தத்தில் காலச் சக்கரம் என்றுமிலா வேகத்துடன் சுற்றும் என்று எழுதிக் காட்டினேன். பல கணக்குகளும் திட்டங்களும், ஜோதிடங்களும், மதிப்பீடுகளும் தவிடு பொடியாகி விடும் என்றும் விளக்கினேன். இது வரை நடந்த சம்பவங்கள் இனி நிகழவிருக்கும் உலக நிகழ்ச்சிகளின் முன் வெறும் கொசுக்கடி போன்றவை என்பதை நாம் உணரவேண்டும். எனவே இந்த மணியோசையைக் கேட்டுத் திருந்திக் கொள்பவர்களாக ஆகவேண்டும்.

பிரளய சகாப்தம் ஆரம்பித்து விட்டதால் காலச் சக்ரம் வேகமாகச் சுழலும் என்றும், அன்று ஆண்டில் நடந்தது இன்று வாரத்தில் நடக்கிறது என்றும் சுட்டிக் காட்டியிருக்கிறேன். காலச் சக்கரத்தின் வேகம் காரணமாகச் சம்பவங்கள் நிகழ்வது மட்டும் துரிதப்பட்டதுடன் நின்று

விடவில்லை. நாம் செயலாற்றக் கூடிய வேகமும் அதற்கு ஏற்ற அளவில் அதிகரித்தே இருக்கிறது. அதாவது அன்று ஒரு காரியத்தைச் செய்ய ஓராண்டு தேவைப் பட்டிருக்கு மென்றால், இன்று அதே காரியத்தை ஒரே வாரத்தில் செய்து முடித்து விடமுடியும். இன்று மட்டும் நமது ரஸூலுல்லாஹ் (ஸல்) பூத உலகில் இருந்திருப் பின் அன்று அன்றையச் சூழ்நிலையில், அன்றையக் காலச் சக்கர வேகத்தில், இருபத்து மூன்று ஆண்டுகளில் செய்து முடித்ததை, இன்று, இன் றையச் சூழ்நிலையில் இன்றைய வசதிகளுடன் இன்றையக் காலச் சக்கர வேகத்தில் இருபத்தி மூன்று வாரங்களில் செய்து முடிப்பது சாத் தியமே. அவர்கள் இறந்து விட்டார்கள் என்று நினைக்கிறீர்கள்! நவூது பில்லாஹி - மின் - தாலிக்! அவர்கள் இருக்கத்தான் செய்கிறார்கள். அவர்கள் பெயரைச் சொல்லிக் கொண்டு திரியும் நாம்தான் கண் விழிக்கவேண்டும். அன்று மக்காவில்-முஹாஜிர் கள் என்ற சமுதாயம் உண்டாக, உமர் பாருக் (ரலி) வந்து சேர்ந்து, எண்ணிக்கை நாற்ப தானது முதல், பத்து ஆண்டுகள் தான் ஆயின. மதீனாவில் அன்ஸார்கள் என்ற சமுதயம் உண்டாக நபி அவதாரச் செய்தி கிடைத்ததிலிருந்து மூன்று ஆண்டுகள் தான் ஆயின. இன்றையக் காலச் சக்கர வேகத்தில் ஒரு முஹாஜிர் சமுதாயம் உருவற்ற நிலையிலிருந்து உருவை அடைவதற்குப் பத்து வாரங்கள் போதும். அன்ஸார்கள் போன்ற தியாக புத்தி யுள்ள சமூகமாயின் அவர்கள் உருவாவதற்கு மூன்று வாரங்கள் போதும். ஸுன்னத்தின் படி உம்மத்தில் உள்ளவர்கள் ஆரம்பிக்கும் முயற்சிகள்

பலிதமாகாது போயின் குற்றம் நம்முடையது; ஸுன்னத்தோ சம்பூர்ணமானது.

ஆகவே இன்று நமது கடமை என்னவென்பதை உணர்ந்து நாம் தீவிரமாகச் செயலாற்ற முனைய வேண்டும். சமூகச் சேவையிலே, சமூகத்தைத் தூக்கி நிறுத்தும் பணியிலே பங்கு கொள்ள வேண்டும். ஏனென்றால் தன் சமூகம் சாய்ந்து கிடக்கும் நிலையில், தான் மட்டும் எப்படியும் தப்பித் கொள்ளலாம் என்ற சுயநல எண்ணத்துக்கு இந்தப் பிரளய சகாப்தத்தில் இடமிருக்க முடியாது. சமுத்திரத்தில் உள்ள நீர்த்துளிகளைப் போல, நாம் சமுதாயத்தின் பகுதியாக இருக்கிறோம். சமுத்திரமே இல்லாவிட்டால் நீர்த்துளிகளேது? ஆகவே சமுதாயத் தொண்டில் யாவரும் அக்கரை காட்டித் தீரவேண்டும். வந்து நெருங்கிவிட்ட ஆபத்தை மற்றவர்களுக்கு உணர்த்தி, அதிலிருந்து தப்பிக்கும் மார்க்கத்தையும் புகட்ட வேண்டும். ஈமான் உள்ள உண்மை முஸ்லிம்களும், முஸ்லிம் சமுதாயங்களும் தான் இனிப் பாதுகாப்புப் பெறப் போகின்றன என்பதை ஒவ்வொருவரும் உணர வேண்டும். ஈமான் உள்ளவர்கள் யார் என்றால் திரு குர்ஆன், ஹதீஸின் கட்டளைகளை, முக்கியமாக தொழுகை, ஜக்காத் பற்றிய கட்டளைகளை நிறைவேற்றி வருபவர்கள் தான்.

நாம் இன்று இருந்து வரும் பிரளய காலத்தை விடவும் சிறியதொரு பிரளயம் மத்திய ஆசியாவில் ஏற்பட்டதையும் இங்கே நினைவுபடுத்தி இதை முடிக்கலாம். ஏனெனில் இந்தச் சகாப்தத்தில் யாருக்குப் பாதுகாப்புக் கிடைக்கும் என்பதற்கு அங்கே ஒரு முன் மாதிரியை நாம் காண முடிகிறது. அது அப்துல் காதிறு ஜீலானி (றலி) வாழ்ந்திருந்த காலம்.

அப்துல் காதிறு ஜீலானி (றலி) தோன்றி என்ன செய்தார்கள்? பூதங்களைப் பிடித்துக் கூசாவில் அடைத்தார்களென்று எழுதி எட்டைக் கெடுத்து வைத்திருப்பவர்களின் ஏடுகளைப் படித்துவிட்டு, மஹல்லத் தீவில் பூதத்தை கூசாவில் அடைத்தார்கள் என்று இன்னும் கதை கூறிக்கொண்டிருப்பவர்கள் கூறிக்கொண்டிருக்கட்டும். அந்த ஆண்டகை (றலி) அவர்கள் செய்த உபந்யாசங்கள், விடுத்த செய்திகள் அழியாதிருக்கின்றன. உண்மைச் சரித்திரம் என்ன? ஹாரூன் அர் ரஷீது போன்ற மன்னர்களின் ஆட்சி நடந்து, வீதிக்கு ஒரு பிக்ஹுச் சட்டம் படித்துக் கொடுக்கு மத்ரஸாவும், வீதிக்கு ஒரு பள்ளியும், வீதிக்கு ஒரு தர்காவும் இருந்த பக்தாது நகரில், ஒரு மத்ரஸாவின் பேராசிரியராக இருந்து அவர்கள் தீன் முரசு அடித்துக் கொண்டிருந்தார்கள். வீதிக்கொரு பள்ளி, வீதிக்கொரு ஸர்பு நஹ்வு பிக்ஹு மத்ரஸா, தர்க்காக்கள்! அந்த நகரில் அனைவரும் தலைப்பாகையும் ஜிப்பாவும் தான் அணிந்திருந்தார்கள்! எனினும் தீன் செத்துக்கிடக்கிறது என்றார்கள். சமூகத்தில் உயிர் இல்லை என்றார்கள். திருந்தாவிடில் தொலைந்து போவீர்கள், மறு சமுதாயம் உண்டாகி தீன் கொடி தூக்கும் என்று எச்சரித்தார்கள். ஆயினும், சிஷ்யர்களான-முரீதுகளான-ஒரு கோஷ்டி மட்டிலும், தனது தீனை உயிர்ப்பித்துக் கொண்டது. பிறகு, அவர்கள் எச்சரித்தது உண்மையாக முடிந்தது. ஒரு சிறிய யாஜூஜ் மாஜூஜ் பிரளயம் ஏற்பட்டது. யாஜூஜ் மாஜூஜ் உண்டாகவிருக்கும் இடம் கோஹெ-காபுக்கு வடக்கே என்று சொல்லக் கேள்விப்பட்டிருப்பீர்கள் 'கோஹெ-காப்' என்பது 'காக்கஸஸ் மலை'. இமயமலைத்

தொடரில் ஈரானுக்கும் அரபு நாட்டுக்கும் வட எல்லையாக உள்ள மலைகள். கோஹ-காபுக்கு வடக்கிலிருந்துதான் அன்று குட்டி யாஜூஜ் மாஜூஜ் பிரளயம் ஏற்பட்டது. மஹாசினத்திலிருந்து ஹூலாகு கான் படை எடுத்து, அவனின் ஈசல் படை வழிந்தோடி வந்தது. அன்றைய "முஸ்லிம் சமுதாயம்" என்ற கரையான் பிடித்திருந்த—அக்கினித் திராவகப் பரீட்சைக்கு நிற்கத் தவறிய கலப்புத் தங்கமாகிய - பெயரிலும் வேஷத்திலும் மட்டும் முஸ்லிமாக இருந்த-தீன் செத்திருந்த-முஹ்யித்தீனின் சங்கநாதம் கொண்டு பயன் பெறத் தவறிய-தீன் சுடர் அற்றிருந்த-தீன் காரியத்தைக் காட்டிலும் வயிறு நிறைதலைப் பெரிதாக நினைத்திருந்த-சமுதாயம் எனும் கட்டடம் இடிந்து விழுந்து தகர்ந்தது. பக்தாது நகரும் நெருப்புக் கிரையாகி சாம்பலாயிற்று. இது கதையோ கற்பனையோ அன்று. சரித்திர நூலில் என்ன எழுதப் பட்டிருக்கிறது என்று தெரிய வேண்டுமா? அன்றைய முழுச் சமுதாயத்தின் இதர நகர்கள் இருக்கட்டும். பக்தாதில் மட்டும் நடந்தவை பற்றிய சரித்திர வரலாற்றின் மொழிபெயர்ப்பு வருமாறு:

"மூன்று நாட்கள் தெருக்களில் இரத்த ஆறுகள் ஓடின. தஜ்லா நதியில் பல மைல்கள் வரை இரத்த ஆறாகவே காணப்பட்டது. ஆறு வாரங்கள் வரை கொடிய கொலை, கொள்ளை, நிஷ்டூரங்கள் தொடர்ந்து நடந்தன. அரண்மனைகள், பள்ளிவாயல்கள், தர்காக்கள் நெருப்பினால் நாசமாயின. தர்காக்களினதும் பள்ளிகளினதும் குப்பாக்களில் தங்கத் தகடுகள் அடிக்கப்பட்டிருந்ததால், அந்தத் தங்கத்தை எடுப்பதற்காக மூர்க்கர்கள் குப்பாக்களை இடித்துத் தரைமட்டமாக்கித் தங்கத்தை

எடுத்துக்கொண்டு எஞ்சியவற்றில் நெருப்பிட்டனர். ஆஸ்பத்திரியிலிருந்த நோயாளிகளும், மத்ரஸாக்களிலிருந்த மாணவர்களும் ஆசிரியர்களும் வாளுக்கு இரையாயினர். பெரும் ஷைகுகளுடையவும் இமாம்களுடையவும், சமாதிகளும் சாம்பலாயின. அரபிப் புத்தகசாலைகளில் நிறைந்திருந்த ஏடுகள் ஆற்றில் எறியப்பட்டன; அல்லது நெருப்பிலிடப்பட்டன. ஐந்து நூற்றாண்டுகளாகத் திரட்டப்பட்ட நூலாராய்ச்சிகள் அடியோடு அழிந்தன. இந்தத் தாக்குதல் ஏற்படுமுன் பக்தாது நகர் இருபது லட்சம் ஜனத்தொகையுள்ள நகராக இருந்தது. ஆறு வாரங்கள் நடந்த சங்காரத்தில் உயிரிழந்தவர்கள் பதினாறு லட்சம் பேர்கள்" என்று சரித்திராசிரியர் இப்னு கல்தூன் எழுதியுள்ளார்.

இந்தப் பிரளயத்தினால் இஸ்லாம் அழிந்ததா? இல்லை. முஹ்யித்தீன் முன்னின்று தீனின் புனருத்தாரண வேலை நடந்த காரணத்தினால், தீன் சுடர் பெற்றிருந்தவர்கள் இந்தப் பிரளயத்திலிருந்து பாதுகாப்பை அடைந்தவர்களாக இருந்தனர். பக்தாது நகரில் எப்படி எல்லாக் கட்டடங்களும் நெருப்புக்கிரையாக, தெய்வாதீனமாக, முஹ்யித்தீன் சமாதியும் அதைச் சுற்றிலும் உள்ளபகுதியும் தப்பித்ததோ அதுபோலவே முஹ்யித்தீன் கொளுத்திய தீன் சுடர்பெற்றிருந்த முஸ்லிம்சமுதாயத்தினரும் தப்பித்தனர்; ஆண்டவன் எச்சரித்த அழிவின் கொடுமையையும் கண்ணால் கண்டனர். இப்ராஹீம் நபியை அக்கினியிலிருந்து காப்பாற்றிய அதே இறைவன் தங்களைக் காப்பாற்றிய கராமத்துகளையும் கண்டனர். முஹ்யித்தீனின் கராமத்து மகிமை, பிசாசைப் பிடித்து கூசாவில் அடைத்ததன்று; குட்டி யாஜூஜ் மாஜூஜ் பிரளயம் நடந்த

சமயத்தில் லட்சக் கணக்கான மக்களை அழிவி லிருந்து காப்பாற்றிய தவ்ஹீதை-தீன் சுடரை-உண் டாக்கிக் கொடுத்ததாகும். அது மட்டுமா? அன்று காடாக இருந்த குர்திஸ்தானத்தில் முஹ் யித்தீன் உண்டாக்கியிருந்த காதிரிய்யா சபைகள், தாக்குதல் நடத்திய ஹுலாகூ கான் படையில் ஓர் அங்கமாக வந்த துருக்கியர்களை இஸ்லாத்தை ஏற்கச் செய்து, அவர்களிடமும் தீன் சுடரை உண் டாக்கி விட்டன. அன்றைய பக்தாதும், அரபிகளின் ஆட்சியும், அப்பாஸிய்யா கிலாபத் என்று அழைக் கப்பட்ட குடும்ப ஆட்சியும் தான் தொலைந்தன; குர்திஸ்தானத்தில் தீன் கொடி ஏறிற்று. அக் கொடிதான், பின்னால் உதுமானிய்யா துருக்கிகள் என்று பெயர் எடுத்த துருக்கிய முஸ்லிம் சமுதா யத்தின் இளம்பிறை நட்சத்திரக் கொடியாயிற்று. அந்தக் கொடி உயர்ந்தபின், நபி (ஸல்) தீர்க்கதரி சனப்படி குஸ்த்துன்-துன்யா (கான்ஸ்டாண்டினோ பிள்) முஸ்லிம்கள் வசமாயிற்று. ஐரோப்பாவை அந்தச் சக்தி அதிர வைத்தது. ஆஸ்திரியாவின் தலை நகரான வீயன்னா வரை பரவிய இஸ்லாமிய ஆட்சி உண்டாயிற்று. பக்தாது நகரில் லட்சக்கணக் கான அரபி நூல்கள் நெருப்புக்கிரையாயின; எனி னும், திரு குர்ஆனும், ஹதீஸும், அவற்றின் வியாக்யான நூல்களும் அழிந்து விடவில்லை. அன்றைய சமுதாயத்தில் பாதுகாப்பு வரம் பெற் றிருந்தவர்களும் காப்பாற்றப் பட்டனர்; பாதுகாப்பு வரம் உள்ள நூல்களும் காப்பாற்றப்பட்டன.

இவைகள் சென்ற காலப் புராணமன்று. சிறிய யாஜூஜ் மாஜூஜ் பிரளயம் ஏற்பட்ட அக்கினிப் பிரளய சரித்திரம். நூஹு நபியின் கப்பலில் சிலர் வெள்ளப் பிரளயத்திலிருந்து காப்பாற்றப்பட்டதை

விட அற்புதமான முறையில், சுத்தத் தங்கமாக இருந்த முஸ்லிம்கள் அக்கினித் திராவகப் பரீட்சையில் தேறி, கசடுகள் மட்டும் அழிந்த சரித்திரம். யாஜூஜ் மாஜூஜின் அசல் நாடகம் ஆரம்பிக்கவிருக்கும் சகாப்தத்தில் அதற்கு ஒரு முன்மாதிரியாக முன் நடந்த நிகழ்ச்சியின் வரலாறு!

முற்றும்.

---

## நீங்கள் தெரிய வேண்டியவை!

**அறிஞர் கரீம் கனி** விளக்கம் தருகிறார்.

'மூரீது கொடுப்பது' என்றால் என்ன? மருந்துக்குச் சாராயம் சேர்க்கலாமா? புளித்த திராக்ஷா ரஸம் பருகுவதால் தவறுண்டா? பன்றி மாமிசம் ஹராமாக்கப்பட்ட விரிவான காரணம் யாது? ஹலால் செய்யப்படாத ஆடு மாடுகளின் தோல்களாலான செருப்புகளை அணிவது ஹராமா? பூட்ஸோடு தொழலாமா? தலையணியின்றித் தொழலாமா? ஜியாரத் என்றால் என்ன? இறந்தவருக்காக ஹத்தம் பாத்திஹா ஓதலாமா? அதன் தத்துவார்த்தமென்ன? ஜமாஅத் தொழுகையில் பெண்களும் சேரலாமா? கோஷா முறை அவசியமா? பெண்களுக்கு ஸுன்னத் செய்ய வேண்டுவது அவசியமா? பேய் பிசாசு உண்டா? கண் திருஷ்டி உண்டா? ஆலிம் சாஹிப்கள் சினிமா பார்க்கலாமா? கடல் நண்டு, சுறு சாப்பிடலாமா? முஸ்லிமல்லாதாருக்கு நமஸ்காரம் செய்யலாமா? தாலி கட்டுதல் மார்க்கச் சடங்கா? ஜோதிடத்தை நம்பலாமா? கனவு எப்படி ஏற்படுகிறது? இன்னும் மிகப் பல பிரச்னைகளுக்கு விரிவான பதில் தருகிறார் கரீம் கனி. நூலுருவில் வெளிவர இருக்கும் இதை மொத்தத்தையும் அடக்க விலைக்கே எடுத்துக் கொள்ள விரும்புபவர்கள் எழுதலாம்.

**ஆர். பி. எம். கனி.**
128, மூர் தெரு, சென்னை-1.